RE/MAX Realtron Blue Force
Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 17 மார்ச் 2023 இதழ்:- 47

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

# இந்துக்களின் கன்னியா

## வெந்நீரூற்றின் கதையும் முடிந்ததா?

திருகோணமலை கன்னியாவில் அமைந்துள்ள வெந்நீரூற்று இந்துக்களின் தொல்பொருள் அடையாள சின்னமாகும். இதற்கும் வரலாற்று தொன்மைமிக்க திருக்கோணேஸ்வர ஆலயத்துக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. இவைகள் திருகோணமலையில் சிவ வழிபாட்டை ஆதாரப்படுத்தும் அடையாளங்களாகும். ஆனால், கன்னியா வெந்நீரூற்று பகுதியில் அமைந்துள்ள இந்துக்களுக்கு (3ம் பக்கம் பார்க்க)




# வசந்த முதலிகேயிற்கு யாழில் கிடைத்த பதில்!




கொழும்பில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக வெடித்த போராட்டத்தின் பின்னர் சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமான பெயர் தான் வசந்த முதலிகே! குறிப்பாக சிங்கள மாணவர்களின் தலைவராக இவர் தன்னை வரிந்து கொண்டமையால் சிங்கள இளைஞர்களின் மத்தியில் இவருக்குத் தனியான ஒரு செல்வாக்கு உள்ளது. அரசுக்கு எதிரான போராட்டத்தை தென் னிலங்கையில் முன்னெடுக்கும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் தான் இந்த வசந்த முதலிகே.(9ம் பக்கம்)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## நடுக்காட்டில் மீட்கப்பட்டதாக கூறப்பட்ட போராளி பாலா பற்றிய தகவல் பொய்யானது! வெளிநாடுகளில் பணம் சேர்க்க வேண்டாமென குடும்பத்தினர் தெரிவிப்பு!



மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளைப் பிரதேசத்திற்குட்பட்ட தாந்தாமலைக் காட்டுப் பகுதியிலிருந்து முன்னாள் போராளி ஒருவர் கடந்த 08.03.2023 புதன்கிழமை மீட்கப்பட்டு வைத்தியசாலையில்(6ம் பக்கம்)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Lawrence/ Galloway
Scarborough $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals
Finch & Pharmacy
Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area
Eglinton/Markham
Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated with Oversized Balcony
Angeline St. N & Springdale
Kawartha Lakes $749,900
Bedrooms: 3 Washrooms: 2
Brand New, Walkout Basement
Kennedy & Dougall Ave
Caledon $799,888
Bedrooms: 3 Washrooms: 3
Semi-Detached Home
Queens Quay & Lower Sherbourne
Toronto $889,000
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit
Brisdale & Clockwork
Brampton $1,985,000
Bedrooms: 4 Washrooms: 4
Assignment Sale, Brand New Home
Meadowvale / 401
Scarborough $1,899,999
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations
Kipling Ave / Finch Ave
Toronto $549,900
Bedrooms: 2 Washrooms: 2
Location Location Location!!!
Simcoe St & Winchester
Oshawa $549,999
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Layout, Large Windows
Woodbridge Ave/ Clarence
Vaughan $799,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Low-Rise Boutique Style Building
Eglinton Ave. W /Mavis
Mississauga $799,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Charming Townhouse In A Great Area
Keele/Sheppard
Toronto $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property
Mccowan & Ellesmere
FOR LEASE
Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout
Martingrove/Rexdale
FOR LEASE
Toronto $2,900
Bedrooms: 3 Washrooms: 1
Renovated Main Floor Unit
Markham & Sheppard
FOR LEASE
Scarborough $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை

எமது இனிய வாசகர்கள், அபிமானிகள், கலா ரசிகர்கள் அனைவரது கவனத்திற்கு! இவ்வாண்டு மண்ட பத்தின் இருக்கைகளின் நம்பர்கள் நுழைவுச் சீட்டில் அச்சடிக்கப்பட்டுள்ளது. எனவே அன்புள்ளங்கள் இறுதி நேரம் வரை காத்திருக்காமல் 416 841 9600 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஒத்துழைப்புக்கும் ஒத்தாசைக்கும் நன்றி! வணக்கம்! வாருங்கள்! அரங்கத்தில் சந்திப்போம்!

# கன்னியா வெந்நீரூற்றின் கதையும் முடிந்ததா?

திருகோணமலை கன்னியாவில் அமைந்துள்ள வெந்நீரூற்று இந்துக் களின் தொல்பொருள் அடையாள சின்னமாகும். இதற்கும் வரலாற்று தொன்மைமிக்க திருக்கோணேஸ்வர ஆலயத்துக்கும் நெருக்கமான தொட ர்பு உண்டு.

இவைகள் திருகோணமலையில் சிவ வழிபாட்டை ஆதாரப்படுத்தும் அடை யாளங்களாகும். ஆனால், கன்னியா வெந்நீரூற்று பகுதியில் அமைந்துள்ள இந்துக்களுக்கு சொந்தமான ஆலய மொன்றை புனரமைக்க முற்பட்ட வேளையில், அப்பகுதி பிக்குவின் தலையீட்டால் நெருக்கடிகள் ஏற்பட் டன.

இதனைத் தொடர்ந்து அங்குள்ள அடையாளங்கள் அநுராதபுர காலத் தின் பௌத்த வழிபாட்டுக்கு உரிய தென்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து 2011இல் வெளி யிடப்பட்ட அரச வர்த்தமானிக்கு அமைவாக குறிப்பிட்ட இடம் பாது காக்கப்பட வேண்டிய தொல்பொருள் பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. எனினும் இந்தப் பகுதியின் நிர்வாகம் பிரேதச சபையின் ஆளுகைக்கு உட் பட்டதாகவே இருந்தது.

பின்னர் சிறிது காலம் இராணுவத்தி னரின் கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும், உத்தியோகபூர்வமாக வெந் நீரூற்றின் நிர்வாகம் பிரேதச சபைக்கு உட்பட்டதாகவே இருந்தது. இந்த நிலையில் கன்னியா வெந்நீரூற்று தற்போது திருகோணமலை தொல் பொருள் திணைக்களத்தின் வருமான முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வரப்படுவதாக திணைக்களம் ஊடக அறிக்கையொன்றின் மூலம் வெளிப் படுத்தியிருக்கின்றது.




இதன் மூலம் கன்னியா வெந்நீரூற்றி லிருந்து கிடைக்கப் பெறும் வருமான ங்கள் அனைத்தும் நேரடியாக மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்பட வுள்ளது.

இங்கு விடயம் வருமானமல்ல மாறாக கன்னியா வெந்நீரூற்றின் நிர்வாகம் முற்றிலும் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்படவுள்ளது. ஏற்க னவே, குறித்த பகுதியின் கட்டுப் பாட்டை முற்றிலுமாக பிரேதச சபை இழந்திருக்கும் நிலையில், தற்போது வெந்நீரூற்றின் நிர்வாகமும் உத்தி யோகபூர்வமாக தொல்பொருள் திணை க்களத்தின் கீழ் சென்று விட்டது.

இனி அந்தப் பகுதியில் பிரேதச சபை எந்தவொரு தலையீட்டையும் முன்னெ டுக்க முடியாது.

திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயத்தையும் இவ்வாறானதொரு நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டு செல்லும் திட்டத்துடனேயே விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநரும் இந்த விடயத்தில் கூடுதல் ஆர்வத்தை காண்பித்திருந்தார். எனினும் விடயம் பல்வேறு மட்டங்களில் விவாதிக்கப் பட்டதைத் தொடர்ந்து, தொல்பொருள் திணைக்களம் சற்று பின்வாங்கி அமைதியானது.

குறிப்பாக இந்திய தூதுவர் திருக் கோணேஸ்வரத்துக்கு சென்று விடய ங்களை மேற்பார்வை செய்திருந்தார். பின்னர் அமெரிக்க தூதுவரும் ஒரு முறை சென்றிருந்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்துக்களின் ஆலயமொன்றின் மீது அத்துமீறல்கள் மேற்கொள்ளப்படு வதான பார்வை, சர்வதேசளவில் முன் வைக்கப்பட்டது. இதனால் விடயம் நிறுத்தப்பட்டது.

ஆனால், முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டதென்று கூறிவிட முடியாது. தற்போது திருகோணமலை இந்துக் களின் வரலாற்றோடு பின்னிப்பிணைந் துள்ள கன்னியா வெந்நீரூற்றுப் பகுதி யின் நிர்வாகம் கையகப்படுத்தப்பட்டு ள்ளது.

இதேபோன்று இன்னும் சில வருடங் களில் கோணேஸ்வர ஆலயத்தின் மீதும் இவ்வாறானதோர் அணுகுமுறை முன்னெடுக்கப்படலாம்.

அப்பகுதியை உல்லாசப் பயணிகளுக் கானதாக பிரகடனப்படுத்தி விட்டு அந்தப்பகுதியின் நிர்வாகத்தை ஒன்றில் உல்லாசத்துறை அல்லது தொல் பொருள் திணைக்களம் தங்களுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரலாம்.

கன்னியா தொடர்பில் பல கண்டன அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திலும் பேசியிருக்கின்றனர். கூடவே, இந்து அமைப்புகள் என்போரின் கண்டன அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக் கின்றன.

வடக்கிலிருந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சிவில் சமூகத்தின் பிரதி நிதிகள் அடங்கலாக ஒரு முறை பேரணியும் நடத்தியிருந்தனர். தற் போது திருகோணமலை தமிழ் மக்க ளுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் இல்லாத நிலையில் யாரால் இது தொடர்பில் பேச முடியும்?

# முடியாட்சிக்கு முடிவு கட்டுமா கனடா?

பிரித்தானிய முடியாட்சி தொடர்பில் கனேடிய மக்கள் மத்தியில் சாதகமான நிலை கிடையாது என தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் மேற் கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு மூலம இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கனடா தொடர்ந்தும் முடியாட்சியின் கீழ் இயங்க வேண்டுமென வெறும் 19 வீதமானவர்கள் மட்டுமே விருப்பம் தெரிவித்துள்ளனர். கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 31 வீதமானவர்கள் முடியாட்சிக்கு ஆதரவினை வெளியிட்டிருந்தனர். எனினும் தற்பொழுது இந்த எண்ணிக்கை மேலும் குறைவடைந்துள்ளது.

கனேடிய மக்கள் மத்தியில் பிரித்தானிய முடியாட்சி மற்றும் அரச குடும்பம் தொடர்பிலான நல் அபிப்பிராயம் வீழ்ச்சியடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படு கின்றது. கனடாவின் அநேகமான மாகாணங்களில் வாழும் மக்கள் பிரித்தானிய முடியாட்சியை நிராகரிக்கத் தொடங்கியுள்ளனர். மஹாராணி இரண்டாம் எலிச பத்தின் மறைவின் பின்னர் மக்கள் மத்தியில் அரச குடும்பம் பற்றிய சாதக நிலை குறைவடைந்து செல்லும் போக்கினை அவதானிக்க முடிகின்றது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து விடுதலையான ஈழத்தமிழர்கள் தொடர்ந்தும் சிறப்பு முகாம் இருட்டறையில் சித்திரவதை அனுபவிப்பு!

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை குற்றச்சாட்டில் 32 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த நிலையில் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்த, முருகன், சாந்தன், ஜெயக்குமார் மற்றும் ராபர்ட் பயஸ் ஆகிய நால்வரும் தற்போது வரை திருச்சி சிறப்பு முகாமில் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

உச்ச நீதிமன்றம் விடுவித்தும் முழுமையாக விடுதலையை அனுபவிக்க முடியாதவாறு சூரிய வெளிச்சத்தை கூட பாரக்க விடாது இருட்டறைக்குள் கொடுமைகளை அனுபவித்து வருவது குறித்து ராபர்ட் பயஸ் தமிழக முதல்வருக்கு எழுதிய கடிதத்தின் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

கடந்த 06.03.2023 அன்று திகதியிட்டு ராபர்ட் பயஸ் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு எழுதிய கடிதத்தில் தமது விடுதலையை வலியுறுத்தி தொடர்ந்து எழுதிய கடிதங்களுக்கு எவ்வித பதில் நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக அதில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைவாக தனது கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 8ம் திகதி முதல் திருச்சி சிறப்பு முகாமில் பட்டினி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். தமிழக முதல்வர் முக..ஸ்டாலினுக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்குண்டு 32 ஆண்டுகால கொடுஞ் சிறைவாசத்துக்கு பிறகு கடந்த 11.11.2022 அன்று உச்ச நீதிமன்றத்தால் ஆறு தமிழர்களும்



விடுதலை செய்யப்பட்ட நிலையில், நான் உட்பட நான்கு பேர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளதை தாங்கள் நன்றாக அறிவீர்கள்.

விடுதலை கிட்டியதும் சிறைவாழ்வு முற்றுப் பெற்று விட்டதாக பெரிதும் நம்பிக் கொண்டிருந்த எனக்கும், எனது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் தமிழ்ச் சொந்தங்களுக்கும் சிறப்பு முகாம் எனும் சித்திரவதைக் கூடத்தில் அடைக்கப்பட போகிறேன் என்பது தெரியவில்லை.

வெளியுலகம் நான் விடுதலை பெற்று மகிழ்வோடு வாழ்வதாக எண்ணிக் கொண்டிருக்க, நானோ ஒவ்வொரு நாளும் வதைபட்டுக் கொண்டிருக்கிறேன். சட்டத்தின் பிடியிலிருந்து முழுமையாக விடுபட்டும் கூட இந்த நொடி வரை விடுதலையின் சுவையை என்னால் உணரமுடியவில்லை என்பதனை வேதனையோடு பதிவு செய்கிறேன். திருச்சி சிறப்பு முகாம் அலுவலகத்தில் உள்ள ஒரு அறையில் என்னையும், ஜெயக்குமாரையும், மற்றுமொரு அறையில் முருகனையும், சாந்தனையும் என அடைத்து வைத்திருக்கிறார்கள்.


உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு மூன்று மாதங்களிற்கு மேல் ஆகிறது. இன்னும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியவில்லை. சூரியனைக் கூட பார்க்க விடவில்லை. துவைத்த துணிகளை வெயிலில் உலர்த்தவும் அனுமதியில்லை.

தங்க வைக்கப்பட்டுள்ள அறையிலேயே சமைத்துக் கொண்டு அங்கேயே உண்டு உறங்கவும் செய்கிறோம். சுவாசப் பிரச்சினைகள் ஏற்பட்டு ஆஸ்துமா, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாகியுள்ளேன். குறைந்த பட்ச உடல்நலனைப் பேண நடை பயிற்சி, விளையாட்டு என எதற்கும் அனுமதி கிடையாது. எப்போதும் ஒரே அறையில்தான் உள்ளோம். முகாமுக்கு உள்ளே என்றாலும் உலாவ விடுங்கள் எனக் கேட்டால் போலியான பாதுகாப்பை காரணமாக காட்டுகிறார்கள் அதிகாரிகள். எனது 32 ஆண்டுகால சிறை வாழ்வில் எத்தனையோ சிறைகளில் இருந்துள்ளேன். அங்கே எல்லாம் பல தரப்பட்ட மக்களோடு ஆண்டு கணக்கில் இருந்துள்ளேன். அப்போது எல்லாம் எந்தவித பாதுகாப்பு பிரச்சினையும் எழுந்ததில்லை. உள்ளேயே நடமாடும் குறைந்த பட்ச சுதந்திரம் மறுக்கப்பட்டதும் இல்லை.

ஆனால் சிறப்பு முகாமில் எல்லாம் தலைகீழாக இருக்கிறது. பெரும்பாலும் இங்கே எமது நாட்டைச் சார்ந்தவர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களாலேயே எமக்கு ஆபத்து எனக்கூறி முகாமில் விடாமல் ஒரே அறையில் அடைத்து வைத்திருப்பது உள்நோக்கம் கொண்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

பாதுகாப்பு எனும் பெயரில் நூற்றுக்கும் மேற்பட்ட காவல்துறையினரை நிற்க வைத்து பெரும் நெருக்கடியை கொடுக்கிறார்கள். நான் இருந்த புழல் சிறையில் கூட இத்தகைய இறுக்கத்தை நான் என்றும் உணர்ந்ததில்லை. சிறப்பு முகாமில் இருந்து விடுபட்டு அயல் நாட்டுக்கு செல்ல கோரிக்கை வைத்தால் அதற்கும் அதிகாரிகள் தரப்பில் இருந்து எந்தவித பதிலும் வருவதில்லை. அது தொடர்பில் மூன்று வாரங்களுக்கு முன்பு எழுதிக் கொடுத்தும் இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.

இங்கே எமக்கு பொறுப்பாக உள்ள வருவாய்த்துறை அதிகாரிகள் வரும் போது இது பற்றி கேட்டால் மேல் அதிகாரிகள் தான் இது பற்றி முடிவு செய்ய வேண்டும் என கைவிரித்து விடுகிறார்கள். பாதுகாப்புக்கு இருக்கும் அதிகாரிகளிடம் கேட்டால் அவர்களும் தங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என சொல்லி விடுகிறார்கள். இவ்வாறாக அவர் தெரிவித்தார்

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

19 மார்ச் 2023 ஞாயிற்றுக் கிழமை – பிரதோஷ விரதம்

04 ஏப்ரல் 2023 செவ்வாய்க் கிழமை – பங்குனி உத்தரம்

விசேட அபிஷேகமும் பூஜையும் காலை 10.00 மணிக்கு நடைபெறும். பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# கனடிய சட்டத்துறையில் சாதித்த ஈழத்தமிழன் சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா

வருடாந்திர கனேடிய சட்ட விருதுகளில் எதிர் காலத்தை சிறப்பாக வடிவமைப்பதற்கான லிங்கன் அலெக்சாண்டர் சட்டக்கல்லூரி விருது பெற்றவராக சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த விருது கனடா முழுவதிலும் உள்ள முன்னணி சட்ட நிறுவனங்களில் இருந்து குறைவான பிரதிநிதித்துவ சமூகங்களுக்கான நீதிக்கான அணுகலை வலுப்படுத்துகின்ற, புதுமையின் மூலம் சட்ட சேவைகளை மேம்படுத்துகின்ற, மேலும் மாணவர்களை வழி காட்டுவது மட்டுமின்றி அதற்கும் அப்பால் சட்டக் கல்வியில் முதலீடு செய்கின்ற சட்ட நிறுவனத்துக்கு வழங்கப்படும் விருதாகும்.

சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா ஒரு பொறியியலாளர் மற்றும் சட்டத்தரணி ஆவார். அவர் கடந்த காலங்களில் பல விருதுகளை வென்றுள்ளார். மற்றும் பல பல்கலைக் கழகங்களில் மாணவர்களுக்கு வழிகாட்டியாக உள்ளார்.

சுனாமியின் போது விடுதலை புலிகளுக்கு உதவியதற்காக கனடாவிலும் அமெரிக்காவிலும் ஒரு முறை சிறையில் அடைக்கப்பட்டு சிறையில் இருந்து சட்டம் பயின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சாதனைத் தமிழனாக மீளும் சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராஜா



மென்மேலும் வளர்ந்து பார் போற்றும் பெருமையுற வேண்டுமென ஈழநாடு பத்திரிகையும் அதன் வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள்.

# ஸ்ரீதரன் எம்.பி. அழைத்ததால் நோயாளியை இடையில் விட்டுச் சென்ற மருத்துவர்!



பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அழைக்கிறார் என்று கூறி, நோயாளியை பரிசோதித்து முடிக்காமல் இடையிலேயே சென்றார் என்று தனியார் மருத்துவ நிலைய மருத்துவர் மீது மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கடந்த 14 மார்ச் 2023 மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளிநொச்சி கிளை அலுவலத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தனர்.

13 மார்ச் 2023 திங்கட்கிழமை நடந்த தாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, அக்கராயன்குளத்தை சேர்ந்த ஒருவர் நோய் வாய்ப்பட்ட தனது தாயாரை அழைத்துக் கொண்டு, நீண்ட தூரம் பயணித்து கிளிநொச்சிக்கு வந்ததாக முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள தனியார் மருத்துவ நிலையத்துக்கு சென்றதாகவும், மருத்துவரிடம் சிகிச்சைக்கு சென்ற போது, ஐந்து நிமிடம் வரை தாயாரை பரிசோதித்து சில விடயங்களை சிட்டையில் எழுதினார்.

இடையிலேயே மன்னிக்கவும் சிறீதரன் எம்.பி கூட்டம் ஒன்றுக்கு வருமாறு அழைத்துள்ளார் என்று கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து மருத்துவர், நோயாளி மீதான பரிசோதனையை இடைநடுவில் விட்டுச் சென்றுள்ளார். இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர் கேள்வி எழுப்பியபோது, தரக்குறைவாக அவரை ஏசினார் என்றும் முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் நோயாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். வைத்தியசாலையின் வெளிநோயளர் பிரிவு, மாதாந்த சிகிச்சைகள் இடம்பெறவில்லை.

அத்தியாவசிய சிகிச்சைகள் மற்றும் அவசர சிகிச்சைகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டன. இதனால் சிகிச்சைக்காக வருகை தந்த மக்கள் ஏமாற்றத் துடன் திரும்பிச் சென்றதுடன், அரசாங்கத்தை கடுமையாகச் சாடினர்.

# கனடாவில் விருது வழங்கும் நிகழ்வில் அரை நிர்வாணமாகத் தோன்றிய யுவதி!

கனடாவில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ் வில் அரை நிர்வாணமாக தோன்றிய யுவதி ஒருவரினால் குழப்பம் ஏற்பட்டுள்ளது. எட்மோன்டனில் நடைபெற்ற



ஜீனோ விருது வழங்கும் நிகழ்வில் இவ்வாறு குழப்ப நிலை உருவாகியுள்ளது.

பிரபல பாடகி Avril Lavigne மேடையில் பேசிக் கொண்டிருந்த போது பெண் ஒருவர் அரை நிர்வாணமாக மேடையில் தோன்றி கிறின்பெல்ட் எனப்படும் பாதுகாக்கப்பட்ட வலயத்தில் வீடமைப்பு திட்டங்கள் முன்னெடுப்பதனை எதிர்த்துள்ளார்.

மேலாடையின்றி தோன்றிய குறித்த பெண், உடலில் கிறின்பெல்ட் திட்டம் அபிவிருத்தி செய்வதனை எதிர்ப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை எதிர்க்கும் வகையில் கிறின்பெல்ட் பகுதியை பாதுகாக்குமாறு கோரி உடலில் வாசகமொன்றை எழுதியிருந்தார். ஒன்றாரியோவின் கிறின் பெல்ட் பகுதி என்ற பாதுகாக்கப்பட்ட வலயத்தில் 7400 ஏக்கர் காணி வீடமைப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட பகுதியை வீடமைப்பிற்காக ஒதுக்க வேண்டாம் என சுற்றாடல் ஆர்வலர்கள் கோரி வருகின்றனர்.

# மாவை முதலில் தமிழரசு கட்சியை சரிப்படுத்த வேண்டும்

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இணங்கிச் செயல்பட வுள்ளதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இணக்கத்தை சீர்குலைத்து விட்டு பின்னர் எவ்வாறு இணங்கிச் செயல்படுவது? உண்மையில் அனைவருடனும் இணங்கிச் செயல்பட வேண்டுமாயின் அதற்கான பிள்ளையார் சுழியை தமிழரசு கட்சியே இடவேண்டும். ஆனால் இணங்கிச் செயலாற்றுவதற்கு எதிரான அபசகுண வேலைகளை மட்டுமே தமிழரசுக்கட்சி முன்னெடுத்து வந்திருக்கின்றது. தேர்தல் தொடர்பில் துல்லியமாகக் கணிக்க முடியாமல் அவசரப்பட்டு கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தமிழர்ஐக்கியத்தில் மிகப்பெரிய சீர்குலைவை ஏற்படுத்தியது. இப்போது மீண்டும் கட்சிகளுடன் இணங்கிச் செயல்படப் போவ தாக மாவை கூறுகின்றார்.

தமிழ்த் தேசியம் பேசும் ஏனைய கட்சிகளோடு ஒப்பிடடால் அதிக உட்கட்சி சீர்குலைவும் தலைமைத்துவ குழப்பங்களும் தமிழரசு கட்சியினர் மத்தியிலேயே இருக்கின்றது. ஏனைய கட்சிகளிலும் தலைமைத்துவ பலவீனம் இருக்கின்றது. ஆனால், அந்தக் கட்சிகளுக்கு தங்களின் தலைவர் யார் என்பதில் குழப்பங்கள் இல்லை. தலைமை எடுக்கும் முடிவுக்கு கட்சியின் அங்கத்தவர்கள் கட்டுப்படுவார்கள். ஆனால், தமிழரசு கட்சியில் மாவை சேனாதிராசா கூறுவதற்கு ஏதாவது பெறுமதி இருப்பதற்கு சான்றுகள் இல்லை.

மாவை சேனாதிராசா எதனைக் கூறுகின்றாரோ அதற்கு மாறாகவே விடயங்கள் அனைத்தும் நடக்கின்றன. கடந்த காலத்தில் அனைத்து கட்சிகளும் ஓரணியாகப் பயணிப்பது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும் ஐக்கியத்துக்கு ஆதரவாகவே மாவை கருத்துத் தெரிவித்திருக்கின்றார். உதாரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பும் விடயத்தில் ஏனைய கட்சிகளுடன் இணங்கிச் செல்வதாக வாக்குறுதியளித்து விட்டு பின்னர், தமிழரசு கட்சியினருக்குள் சென்றவுடன் மாவைக்கு எதுவுமே நினைவில் இருக்காது.

சம்பந்தனின் அலட்சியமும் மாவையின் இயலாமையுமே கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி வெளியேறுவதற்கான பிரதான காரணமாகும். வெளியேறிய பின்னர்கூட, எதிரிகள் போன்றே ஏனைய கட்சியினர் நோக்கப்பட்டனர். அதனையும் மாவை சேனாதிராசாவின் தலைமைத்துவத்தால் தடுக்க முடியவில்லை. ஆனால், இப்போது மீண்டும் தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இணங்கிச் செயல்படப் போவதாக மாவை கூறுகின்றார். சுமந்திரனும் சாணக்கியனும் அவ்வப்போது சிறீதரனும் உள்ளூராட்சி தேர்தலுடன் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கின்றனர். உண்மையில், தமிழரசு கட்சியினர் எந்தத் தேர்தலுக்காக குரல் கொடுக்க வேண்டும்?

இப்போது கோர வேண்டியது உள்ளூராட்சி தேர்தல் அல்ல மாகாண சபை தேர்தலையே தமிழர்கள் கோர வேண்டும். மாகாண சபை இல்லாத சூழலில் ஆளுநர் என்னும் ஒரு நபர் அனைத்து அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டு அட்டகாசம் புரிந்து கொண்டிருக்கின்றார். கிழக்கு மாகாண ஆளுநர், 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகப் பேசுகின்ற அளவுக்கு துணிவுள்ளவராக இருக்கின்றார். இந்த நிலைமைகள் எதனால் ஏற்பட்டன? மாகாணசபை தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்பட்டதை ஒரு ஜனநாயக விரோத செயலாக எவருமே விவாதிக்கவில்லையே! உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்படுவது ஜனநாயக விரோதமென்றால், அந்த ஜனநாயக விரோத செயல் எப்போதோ ஆரம்பித்து விட்டதல்லவா?

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி அண்மையில் மாகாண சபை தேர்தலை முதலில் நடத்த வேண்டுமென்று அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அவர்கள் மட்டும் தான் இதுவரையில் முதலில் வைக்க வேண்டிய தேர்தல் தொடர்பில் பேசியிருக்கின்றார்கள். இன்று திருகோணமலையில் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செயலற்ற நிலையில் இருக்கின்றார். தமிழரசு கட்சியின் தலைவரென்னும் நிலையில் மாவை சேனாதிராசா இது வரையில் மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

ஒரு கட்சியின் தலைவர் என்பவரின் பணி அறிக்கை வெளியிடுவதும் தேர்தல் காலத்தில் இடம்பெறும் வேட்பாளர் தெரிவுச் சண்டைகளுடன் மல்லுக் கட்டுவதும் தானா? அதுதான் தலைமையொன்றின் பணியென்றால் மாவை சேனாதிராசா அவரின் தலைமைத்துவ பணியை சிறப்பாகத் தான் செய்கின்றார் எனலாம். அறிக்கைகளுக்கு அப்பால் மாவை சேனாதிராசா, தான் தலைமைத்துவம் வகிக்கும் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பில் சிறிதாவது கரிசனை காண்பிக்க வேண்டும். தமிழரசு கட்சியினரை சரிப்படுத்தினால் தான், ஏனைய கட்சிகளுடன் இணங்க முடியும்.

# நடுக்காட்டில் மீட்கப்பட்டதாக கூறப்பட்ட போராளி பாலா பற்றிய தகவல் பொய்யானது! வெளிநாடுகளில் பணம் சேர்க்க வேண்டாமென குடும்பத்தினர் தெரிவிப்பு!



மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளைப் பிரதேசத்திற்குட்பட்ட தாந்தாமலைக் காட்டுப் பகுதியிலிருந்து முன்னாள் போராளி ஒருவர் கடந்த 08.03.2023 புதன் கிழமை மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் முன்னாள் போராளி தொடர்பான விடயங்கள் முற்றிலும் பொய் என அவரது குடும்பத்தினர் மட்டக்களப்பு ஊடக அமையத்தில் ஊடகவியலளர் சந்திப்பில் தெரிவித்துள்ளனர்.

காட்டிலிருந்து மீட்கப்பட்டதாக கூறப்படும் முன்னாள் போராளியின் சகோதரியும் அவரது மருமகனுமே 13 மார்ச் 2023 திங்கட்கிழமை மட்டக்களப்பு ஊடக அமையத்தில் வைத்து இவ்வாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்கள்,

அவர் நடுக்காட்டில் தங்கியிருக்கவில்லை. எங்களுக்கு சொந்தமான இடத்திலேயே அவர் தங்கியிருந்தார். அது மட்டுமன்றி, அவர் தங்குவதற்கான கொட்டகையையும் நாங்களே அமைத்துக் கொடுத்தோம்.

அதேவேளை, அவருக்கு சமையலுக்குத் தேவையான உணவுப்பொருட்களையும் நாங்களே ஒவ்வொரு வாரமும் கொடுத்து வருகின்றோம். அவரை எங்களது வீட்டில் தங்க வைப்பதற்காக பல தடவைகள் முயற்சி செய்தும் அவர் அதற்கு சம்மதிக்காது தனியாகவே வாழ்ந்து வந்தார். இவ்வாறான நிலையில், அவர் காடுகளில் இருக்கும் காய்களையும், பழங்களையும் உண்டு வாழ்ந்து வந்தார், அவர் கவனிப்பார் அற்று இருக்கின்றார். மனநலம் பாதித்துள்ளார் எனக் கூறி பொய்யான தகவல்களை சமூக ஊடகங்கள் மூலம் பரப்புவதால் நாம் தான் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

மேலும், அவர் முன்னாள் பேராளி என்றும் அவரைப் பராமரிப்பதற்காக வெளிநாடுகளில் பலர் பணம் சேகரித்து வருவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. அவ்வாறான செயற்பாடுகளில் யாரும் ,ஈடுபட வேண்டாம். அவரை வைத்து சிலர் பணம் சம்பாதிக்க நினைக்கின்றார்கள். தற்போதும் அவரைப் பராமரிப்பதற்காக தினமும் மூவாயிரம் ரூபா பணம் பராமரிப்பவருக்கு வழங்கப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றது.

இவ்வாறான நிலையில், வெளிநாட்டில் இருப்போர் அவர் தொடர்பில் தகவல் எதுவும் அறிய வேண்டுமாயின் எமது கிராமசேவகர் ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள். தங்களிற்கு தேவையான விடயங்களை உண்மை நிலையை நாம் கூறுவோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர், முன்னாள் போராளியான பாலா எனவும், கடந்த 4 வருடங்களாக இவர் குடும்பத்தினரால் கைவிடப்பட்டு, மனநலம் குன்றிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இவர் தாந்தாமலைப் பகுதியில் அமைந்துள்ள றெட்பாணா எனும் கிராமத்திற்கு அப்பாலுள்ள காட்டுப் பகுதியில் தூர்ந்து போன கொட்டகை ஒன்றில் வசித்து வந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தகவலறிந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், மற்றும் அவரது சக முன்னாள் போராளிகளும் அவரை அணுகியுள்ளனர். இவர்களைக் கண்டதும் பாலா கட்டுப் பகுதிக்குள் மறைந்து விடுவார். அதனையடுத்து அவரை பல நாட்களாக இரவு பகலாக அவதானித்து வந்த நிலையிலேயே கடந்த புதன் கிழமை இவரை ஊர் மக்களும் அதிகாரிகளும் வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளுக்கு தப்பியோடும் இராணுவ அதிகாரிகள்

பிரிகேடியர் உட்பட 13 இலங்கை இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட பயணமாக வெளிநாடு சென்று நாடு திரும்பவில்லை என்று ஆங்கில இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவத்தையடுத்து, கடவுச் சீட்டைப் பெறுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு இலங்கை இராணுவ அதிகாரிகள், அவர்களின் படைப்பிரிவுத் தளபதிகளிடம் அனுமதி பெற வேண்டும் என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கும் விளக்கமளித்துள்ளது.

இராணுவ சேவையை விட்டு வெளியேறி, திறமையான அதிகாரிகள் உட்பட பெரும்பாலான அதிகாரிகள் வெளிநாடு செல்ல ஆரம்பித்துள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பல இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா கனடா போன்ற நாடுகள் தடை விதித்துள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# இலங்கை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகே யாழ்.பல்கலை மாணவர்கள் சந்திப்பும் கோரிக்கையும்

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் வசந்த முதலிகே தலைமையிலான அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினருக்கு மாகிய விசேட கலந்துரையாடல் யாழ் நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் 12 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாணத்தில் இடம் பெற்றுள்ளது.

இதன் பொழுது அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால், பயங்கர வாத தடைச்சட்டத்தினை முன்னிலைப் படுத்திய போராட்டம் மற்றும் எதிர் காலத்தில் யாழ் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று கோரிக்கை யாழ் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்திடம் முன் வைக்கப் பட்டது.

இந்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினை என்பது தனியே எரிவாயு அடுப்பு, மின்சாரம் என்பனவற்றுக்குள் எமது கோரிக்கைகள் உள்ளடங்க வில்லை. மாறாக பயங்கரவாத தடைச் சட்டம் என்பதும் எமது தமிழ்மக்களின் பிரச்சினைகளில் ஒரு பகுதியாகவே இருக்கின்றது.

வசந்த முதலிகே ஆறுமாத காலம் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட பின்னர் தான் இது குறித்து ஆழமாக நீங்கள் பார்க்கின்றீர் கள். ஆனால் எமது யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் காணாமலாக்கப்பட்டும் சுட்டு படு கொலையும் செய்யபட்டுள்ளார்கள்.

ஆக போராட்டம் என்பது எமக்கு புதி தல்ல, குட்டிமணி தங்கதுரை பயங்கர வாத தடைச் சட்டம் சிங்களவருக்கும் எதிராக திசைமாறும் போது சிங்களவர் கள் புரிவார்கள் என்று அன்று கூறியது இன்று நிச்சயமாகியுள்ளது.

எமது பிரச்சினைகளை தெற்கிற்கு கொண்டு சென்று இனி போராட்டங் களின் போது இதனை முன்னிலைப் படுத்துகின்ற பொழுது எமது நிலைப் பாடுகள் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடனான உறவு நிலைகளை ஆரோக்கியமாக்கும் என தெரிவித்திருந்தோம்.




இந்நிலையில் எதிர்காலத்தில் இலங்கை யில் உள்ள பல்கலைக்கழகங்களில் எமது தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து பல்கலைக்கழக மாணவர்களிடையே தெளிவுபடுத்தல் களை மேற்கொள்ள வேண்டும்.

சிங்கள நகரங்களில் சிங்கள மக்கள் மத்தியில் கவனயீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எதிர்காலத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் அனைத்து பல்கலைக்கழக த்திற்கும் வருகை தந்து புரிதலை ஏற்படுத்தவேண்டும். அத்துடன் இதே நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு யுத்தமே பொருளாதார நெருக்கடிக்கு காரணமா எனவினவிய பொழுது அது பிரதான காரணியாக தாம் ஆமோதிப்பதாகவும் தெரிவித்துள் ளார்




இந்நிலையில் கருத்து தெரிவித்த எமது யாழ்.பல்கலைக்கழகப் பிரதிநிதிகள், இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங் களில் மாணவர்களிடையை தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து புரிதலை ஏற்படுத்தும் செயற் திட்டத்தை வரவேற்கின்றோம்.

இதே நேரம் முறைமையான கலந்துரை யாடல் ஒன்றை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாக எடுத்து அதன் பின்னர் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அபிலாசைகளை அடிப்படை பிரச்சினை களுக்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குரல் கொடுக்கின்ற பொழுது அது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று எனவும் மாணவர்களுக் கூடாகவே நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியும். அந்த அடிப்படையில் சிங்கள மாணவர்களின் தெளிவுபடுத்தலு க்காக பின்வரும் விடயமும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு கையளிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது உரிமைக்காக கடந்த 70 வருட ங்களுக்கு மேலாக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடினர். தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தினை பயங்கரவாதமாக தெற்கில் சிங்கள மக்க ளிடத்திலும், சர்வதேசத்தின் மத்தியிலும் சித்தரித்த இலங்கை அரசானது இலட்ச க்கணக்கான தமிழ் மக்களை படு கொலை செய்து, கொடுங்கோல் அடக்கு முறை இராணுவத்தினால் தமிழர் தாய கம் எங்கும் ஆக்கிரமித்து உள்ளனர்.

இலங்கைத் தீவு பிரித்தானியாவின் காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த காலம் முதல், ஈழத் தமிழர் களாகிய நாங்கள் எமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி சாத்வீக முறை போராட்டங்களை மேற்கொண்டு வந் தோம்.

இப்போராட்டங்கள் வன்முறையினூடாக அடக்கப்பட்டதினால், ஆயுதப் போராட் டத்தினை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டோம். தமிழ் மக்களின் தேசிய ஆயுதப் போராட்டம் இலங்கை பேரினவாத அரசி னால் கொடுங்கரம் கொண்டு மிகப் பெரும் மனிதப் பேரழிப்பினூடாக முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது. இந்த இறுதி யுத்தத்தின் போது இறுதி ஆறு மாதங்களில் மட்டும் எழுபதி னாயிரத்துக்கு (70,000) மேற்பட்ட எமது உறவுகள் கொல்லப்பட்டதை ஐநா செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக்குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

2017ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது தமிழ்ப் பெண்கள் பாலியல் அடிமைகளாக கையாளப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் நடாத்தப் பட்ட பாலியல் வன்முறை முகாங்கள் பற்றிய விபரங்களை ஐ.நா விடம் கையளித்தது.

ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்திற்குரிய அறிக் கைக்கு அமைவாக, தமிழர் தாயகத்தில் 90,000க்கும் மேற்பட்ட யுத்தமூல விதவைகள் உள்ளனர். இவ்வாறு நீண்ட நெடிய காலமாக இனவழிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் எமதினதிற் கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது. யுத்தம் நிறைவடைந்து கடந்த பதினொரு ஆண்டுகளில் வடக்கு -கிழக்கை இராணுவ மயமாக்கி வரும் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசார, பண்பாட்டு அடை யாளங்களை அழிப்பதுடன் வடக்கு- கிழக்கு பூர்வீக குடிகளான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி, தமிழ்த் தேசியத்தைச் சிதைவடையச் செய்து, அவர்களது இருப்பை இல்லா மல் செய்வதற்காக பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நட வடிக்கைகளை முன்னெடுத்து வருகின் றது. இதன் அடிப்படையில் தொல் பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவள திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்த மயமாக்கல், திட்ட மிட்ட சிங்கள குடியேற்றங்களை இலங்கை அரசாங்கமானது முனைப் போடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

வடக்கு-கிழக்கில் உள்ள சுமார் 200 ற்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களை கையகப்படுத்துவ தற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறன. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமை க்கப்பட்டும், தொடர்ந்தும் அமைக்கப் படுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இன்று பொருளாதார பிரச்சனையாலும், இலங்கை அரசின் அடக்குமுறையாலும் பாதிக்கப்பட்டுள்ள தென்பகுதி சிங்கள தரப்பினர், தற்போது வடக்கு கிழக்கு தமிழ் மக்களை அணுகத்தொடங்கி உள்ளார்.

அவ்வாறு அணுகும் எந்த தரப்பினரும் தமிழ் மக்களின் இனப்பிரச்சனையின் அடிப்படைகளை புரிந்து கொள்ளவ துடன் பின்வரும் விடயங்களில் தமது உறுதியான நிலைப்பாட்டினை வெளிப் படுத்த வேண்டும்.

1. வடக்கு கிழக்கை தாயகமாக கொண்ட தமிழ் மக்கள் தனித்துவமான மொழி, மதம், கலாச்சார அடையாளங் களை கொண்ட தனித்துவமான தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. ஒன்றிணைத்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுவழி தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. தமிழினம் தன்னாட்சிக்கு உரித்துடை யவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. தேசிய இனத்துக்குரிய சுயநிர்ணயம், தமிழினமும் உரித்துடையது என்பதை ஏற்றுக்கொள்வதுடன், அதன்வழி தமது அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையும் அவர்களுக்குண்டு என் பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5. தமிழினம் தமது அரசியல் தலை விதியை தீர்மானிக்க, சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பினுடாக சந்தர்ப்பம் வழங்கப் பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

6.தமிழினத்தின் மீது காலகாலமாக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு, இனப்டு கொலை, (22ம் பக்கம் பார்க்க)

# ஆதிசிவன் கோவிலை அழித்தமைக்கு ராஜபக்ச பரம்பரையே பிச்சை எடுக்கும் நிலை ஏற்படுமென கொந்தளிக்கும் இந்து சமயப் பேரவைத் தலைவர் குமுறல்!



கீரிமலையில் அமைந்திருந்த ஆதிசிவன் கோவில் அழிக்கப்பட்டமைக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பொறுப்பு கூற வேண்டும். அவ்வாறு இல்லை எனில் அவருடைய பரம்பரையே பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் என இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவசக்தி கிரீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலை போன்ற ஒரு பாறைப்பகுதியில் ஆதிசிவன் கோயில் அமைந்திருந்தது. அது தற்போது அழிக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் திட்டமிட்டு விமானங்கள் மூலம் குண்டு போட்டு இந்து கோவிலகள் அழககப்பட்டிருந்தாகவும் அத்துடன் இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் இந்து ஆலையங்களின் புனிதத்தன்மை அழிக்கப்பட்டதாகவும் இந்து சமயப் பேரவையின் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான செயல்களினாலேயே இன்று மகிந்த ராஜபக்ச பதவியை இழக்க நேரிட்டதாகவும் எனவே அவரது சொந்த நிதியில் அழிக்கப்பட்ட ஆதி சிவன் கோவிலை மீள் நிர்மாணித்து மக்களிடம் கையிக்க வேண்டும் என்றும் இந்து சமயப் பேரவையின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒருகோவில் அழிக்கப்பட்டாலே அல்லது அதன் நித்திய பூசைகள் தடைப்பட்டாலே அந்த நாட்டினை ஆட்சி செய்கின்ற அரச தலைவர் பதிவியை இழப்பார் என்றும் அத்துடன் நாட்டில் பஞ்சம் பட்டினி என்பன தலைவித்தாடும் என்றும் இந்து சமயப் பேரவையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்பு இருந்ததை விடவும் 100 மடங்கு பிரமாண்டமாக கீரிமலையில் அழிக்கப்பட்ட ஆதி சிவன் ஆலயத்தை மீண்டும் கட்டித் தர வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## அழிக்கப்பட்ட ஆலயங்களை மீளக்கட்ட அனுமதிக்க வேண்டும்

அழிக்கப்பட்ட ஆலயங்களை மீளக் கட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் ஏனைய ஆலயங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் செஞ்சோற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.


இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை சைவமக்களின் மிகத் தொன்மை வாய்ந்த வரலாற்றிடம் கிரிமலை இப்பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலை போன்ற ஒரு பாறைப்பகுதியில் ஆதி சிவன் கோயில் அமைந்திருந்தது. அச்சிவன் கோயில் தற்போது இல்லை என்று அங்கு போய் வந்த அன்பர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்கள்.

மேலும் பெருமைமிக்க பெண் சித்தரான சடையம்மாவின் சமாதி கோயில் மடம் அதற்கருகிலிருந்த சங்கர சுப்பையர் சுவாமிகளின் சமாதி கதிரை வேலன் கோயில் இவற்றைக் காண வில்லை என்ற செய்தி சைவ மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியை தந்துள்ளது.

சுமார் 33 ஆண்டுகளுக்குப் பின்பு ஆலயத்தை தரிசிக்கலாம் என்று சென்ற மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்தது. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை பதிலளிக்க வேண்டும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாலயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அழிக்கப்பட்ட கோயில்கள் இருந்த இடத்தை சைவமக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும்.



மீண்டும் அந்த இடங்களில் சைவ மக்கள் கோயில்களைக் கட்டுவதற்கான அனுமதியை உடன் வழங்க வேண்டும். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக உடன் குரல் கொடுக்க வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுனர் பொது மக்கள் தங்கள் நிலங்களை பார்வையிடுவதற்கும் அங்கு எஞ்சியுள்ள கோவில்களை தரிசிப்பதற்கும் ஒழுங்கு செய்ய வேண்டும் என்று வேண்டுகின்றோம் என்றார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# வசந்த முதலிகேயிற்கு யாழில் கிடைத்த பதில்!

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக
யாழ்ப்பாணத்தில் இருந்து
– பார்த்தீபன் –

கொழும்பில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக வெடித்த போராட்டத்தின் பின்னர் சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமான பெயர் தான் வசந்த முதலிகே! குறிப்பாக சிங்கள மாணவர்களின் தலைவராக இவர் தன்னை வரிந்து கொண்டமையால் சிங்கள இளைஞர்களின் மத்தியில் இவருக்குத் தனியான ஒரு செல்வாக்கு உள்ளது.

அரசுக்கு எதிரான போராட்டத்தை தென்னிலங்கையில் முன்னெடுக்கும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் தான் இந்த வசந்த முதலிகே.

பல சந்தர்ப்பங்களில் கைதாகி பிணையில் விடுதலையாகியிருப்பவர் போராட்டங்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் பொலிசார் இவர் மீது தடை உத்தரவைப் பெற்று விடுவதும் இவர் தடையைத் தாண்டி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் போது கைதாவதும் இலங்கையில் இன்று வழமையான ஒரு செய்தி தான்.

தென்னிலங்கை இளைஞர்கள் மத்தியில் இவர் ஒரு ஹீரோ! ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இவர் வில்லன்!

இந்த வசந்த முதலிகே சில தினங்களுக்கு முன்னர் தனது சகாக்கள் சிலரையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கான திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இந்த அவசர விஜயமும் யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய பேச்சுவார்த்தைகளும் இலங்கை ஊடகங்களில் பரபரப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது.

தமிழ்ப் பத்திரிகைகள் இவரது விஜயம் அவர் யாழில் நடத்திய பேச்சுக்கள் குறித்து செய்திகளைப் பரபரப்பாக வெளியிட்ட அதேவேளையில் சிங்களப் பத்திரிகைகள் இது தொடர்பான செய்திகளைப் பெருமளவுக்கு இருட்டடிப்பு செய்து விட்டன.

தென்னிலங்கை போராட்டங்களால் கொதித்துக் கொண்டிருக்கும் நிலையில் அவர் எதற்காக யாழ்ப்பாணம் வந்தார்?

அரசுக்கு எதிரான போராட்டங்கள் தென்னிலங்கையில் இப்போது மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. வசந்த முதலிகே தலைமையிலான அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பு இந்தப் போராட்டங்களில் ஒரு முக்கிய பங்களிப்ப வழங்கி வருகின்றது. கோட்டாபயவுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்த அவர்கள் இப்போது ரணிலுக்கு எதிராக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள்.

ஆனால் கோட்டாபயவுக்கு எதிரான போராட்டத்தில் காணப்பட்ட வேகம் – அதில் கலந்து கொண்டவர்களின் தொகை என்பனவற்றை இப்போது காண முடியவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று – போராட்டத்தை ஒடுக்குவதற்கு ரணில் கையாண்ட உபாயங்கள். தலைமை தாங்கிய பலர் கைதானமையும் அவர்கள் மீதான தடைகள் வழக்குகள் என்பன பலரை இந்தப் போராட்டத்திலிருந்து ஒதுங்கிப் போகச் செய்து விட்டது. ஆனால் இந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தாக்குப் பிடிக்கும் ஒருவராக இருப்பவர் தான் வசந்த முதலிகே.



போராட்டங்கள் பலவீனமடைய இரண்டாவது காரணம். கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் காணப்பட்டது போல எரிபொருள் எரிவாயுவுக்கான வரிசைகள் இப்போது இல்லை. அவற்றுக்குத் தட்டுப்பாடும் இல்லை. அதனால் இயல்பு நிலை ஓரளவுக்கு ஓரளவுக்கு உருவாகி விட்டது போன்ற ஒரு நிலை காணப்படுகின்றது. மக்கள் வீதிக்கு இறங்காமைக்கு இது ஒரு காரணம்.

இந்த நிலையில் ரணிலுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பவர்களின் கைகளில் இரண்டு பிரதான காரணங்கள் தான் உள்ளன. ஒன்று உச்சத்துக்கு சென்றுள்ள விலைவாசி. முக்கியமாக மின்சாரக் கட்டணம் பல மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

இரண்டாவது அதிகரித்த வருமான வரி. இந்த இரண்டும் சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டவை தான். அதிகரித்த வருமான வரியால் தாம் வழமையாகப் பெறும் வருமானத்தில் கணிசமான தொகையை மக்கள் இழக்கின்றார்கள். அதேவேளையில் செலவீனங்கள் பல மடங்கு அதிகரித்திருக்கின்றது. பொருட்கள் சேவைகளுக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டமையும் இந்த செலவீன அதிகரிப்புக்கு காரணம்.

இன்று போராட்டம் நடத்துபவர்கள் இவற்றைத்தான் கைகளில் தூக்கியுள்ளார்கள். இந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை கைகளில் எடுக்கின்றது. தென்னிலங்கைப் போராட்டக்காரர்களுக்கு இது தான் பிரச்சினையைக் கொடுக்கின்றது. இப்போது பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிரான போராட்டத்துக்கு சிறுபான்மை மக்களையும் இணைக்கா விட்டால் சர்வதேச அரங்கில் அது கவனத்தைப் பெறாது அவ்வாறான போராட்டம் பலமானதாகவும் இருக்காது என்ற நிலையில் தான் வசந்த முதலிகே தலைமையிலான குழுவினர் அவசரமாக யாழ்ப்பாணம் வந்தார்கள்.




அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் என வசந்த முதலிகே சொல்லப்பட்டாலும் யாழ்ப்பாணம் மட்டக்கப்பு வவுனியா பல்கலைக்கழகங்களை அவர்களால் அதற்குள் இணைக்க முடியவில்லை. அவர்களது போராட்டத்துக்கு அது பலவீனமாகவே இருந்தது. அதனால யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தையும் இதற்குள் இணைக்க வேண்டும் என்ற இலக்குடன் தான் அவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டார்கள்.

பயங்கரவாத தடை சட்டம் என்பதே தமிழருக்கு எதிராக 1979ல் உருவாகியது. மிகவும் மோசமானது என வர்ணிக்கப்படும் இதற்கு எதிராக தமிழர்கள் ஐ.நா. வரையில் சென்று குரல் கொடுத்திருக்கின்றார்கள். இதனால் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் சிறையில் வாடுகின்றார்.கள்.

கடந்த 44 வருடங்களாக தமிழர் தமிழ் கட்சிகள் தமிழ் மாணவர்கள் தமிழ் இளைஞர்கள் தமிழ் தாய்மார்கள் இதற்கு எதிராகப் போராடும் போது வாளாவிருந்து விட்டு இப்போது அந்த பயங்கரவாத தடைச் சட்டம் வசந்த முதலிகே போன்றவர்களையும் பதம் பார்க்கும் போது தான் திடீரென யாழ்ப்பாணத்துக்கு வந்து பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்க்க யாழ் பல்கலையும் இணைய வேண்டும் என அவர்கள் கோரியிருக்கின்றார்.

இதற்கு இணைகிறோம் ஆனால் எமது பிரச்சினைகளையும் உள்வாங்குங்கள் என யாழ் பல்கலை மாணவர் ஒன்றியம் தடாலடியாக பதிலளித்திருக்கின்றது. (யாழ்.பல்கலைக்கழக மாணவர்களது அறிக்கைகள், பதில்கள் 7ம் பக்கத்தில் உள்ளது)

தமது இளைமைக் காலத்தைத் தொலைத்து விட்டு ஒரு இரு தசாப்த காலத்தையும் தாண்டி பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் சிறையில் வாடும் தமிழர்களை மறந்து விட்டு வசந்த முதலிகே மீது பயங்கரவாதத் தடைச் சட்டம் பாய்கின்றது என்பதற்காக மட்டும் தமிழ் மாணவர்களும், தம்முடன் இணைய வேண்டும் என்பது தான் அவர்கள் தேவை.

இன்றுகூட சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களுக்காக குரல் கொடுக்க இந்த அரகலய கிளர்ச்சியாளர்கள் தயாராகவில்லை!

## கன்னியா வெந்நீரூற்றுகளை அபகரித்த தொல் பொருள் திணைக்களம்

இராவணன் தன் தாயின் இறுதி கிரிகைகளுக்காக தனது வாள் கொண்டு உருவாக்கியதாக இலக்கியங்களில் சொல்லப்படும் திருகோணமலை கன்னியாவில் உள்ள ஏழு வெந்நீர் ஊற்றுகளும், தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ளது.



கன்னியா ஏழு வெந்நீர் ஊற்று கிணறுகளை பார்வையிட வருவோரிடம் இருந்து கட்டணம் அறவிடப்படுகின்றது. அதற்காக கட்டணச்சீட்டும் விநியோகிக்கப்படுகின்றது. வருமான முகாமை மற்றும் பராமரிப்பு என்பன பௌத்த




அடையாளம் இருப்பதாக சொல்லப்பட்டு தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

விநியோகிக்கப்படும் கட்டணச்சீட்டில், இது அநுராதபுர காலத்தில் பயன்படுத்தியதாகவும், தொல்லியல் சான்றுகளால் நிரூபிக்கப்பட்ட பௌத்த மத வளாகத்தில் இது அமைந்திருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

10 மார்ச் 2023 முதல் 17 மார்ச் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஶ்ரீதரன் கிருஷ்ணவேணி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஶ்ரீதரன் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 12 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணவேணி ஶ்ரீதரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு விசேந்தி அருளானந்தம்

யாழ்.சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் ஆசிரியர் திரு விசேந்தி அருளானந்தம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாள் 11 மார்ச் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு விசேந்தி அருளானந்தம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### சங்கீதபூஷணம் – இசை ஆசிரியர்

### அமரர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 11 மார்ச் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னம்மா ஐயாத்துரை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 18 மார்ச் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவனாட்சி கணபதி

கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த திருமதி சிவனாட்சி கணபதி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 14 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவனாட்சி கணபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சசிகரன் தவராஜா (கண்ணன்)

தச்சன்தறை அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உணாப்பிளவு முல்லைத்தீவை வதிவிடமாகவும் இங்கிலாந்தை கொண்டிருந்த கண்ணன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு சசிகரன் தவராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். சசிகரன் தவராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 59வது ஆண்டுசிரார்த்த தினம்

### திரு சுப்பிரமணியம் கந்தையா

### திருமதி பார்வதி கந்தையா



அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது 59வது ஆண்டு சிரார்த்த தினம் 20 மார்ச் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அசர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




10 மார்ச் 2023 வெள்ளிக்கிழமை யாழ்.சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 மார்ச் 2023 வெள்ளிக்கிழமை தச்சன்தறை அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உணாப்பிளவு முல்லைத்தீவை வதிவிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சசிகரன் தவராஜா (கண்ணன்) அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 மார்ச் 2023 சனிக்கிழமை யாழ்.சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் ஆசிரியர் திரு விசேந்தி அருளானந்தம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 மார்ச் 2023 சனிக்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமை யாழ்.சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஸ்ரீதரன் கிருஷ்ணவேணி அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



05 மார்ச் 2023 கனடாவில் வசிக்கும் திரு கண்ணன் இலங்கைநாயகம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு கண்ணன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து 13 மார்ச் 2023 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கி மகிழ்ந்தார்.









14 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமைகொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த திருமதி சிவனாட்சி கணபதி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 மார்ச் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு விஜயரூபன் ஜெகதீஸ்வரன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அனறையதினம் திரு விஜயரூபன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்கின்றார். அவரை ஆரோக்கியம் அஸ்வரியம் நிறைந்த வாழ்வு வாழ வேண்டுமென பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள்



17 மார்ச் 2023 வெள்ளிக்கிழமை கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா செல்வரெத்தினம் அவர்களது 41வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்


VADHYA BRINDAM
Uniting 108 Artists
Toronto
Sunday March 19th, 2023 at 5:30 pm
at
Richmond Hill Centre for the Performing Arts
10268 Yonge St, Richmond Hill,
ON L4C 3B7
FOR MORE INFORMATION:
PLEASE CALL
647-808-5764

# யாழ்ப்பாணத்துக் கிணற்று நீரைக் குடிக்கலாமா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



கடந்த ஆண்டின் இறுதியில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அது தொடர்பாக மேடைகளில் பேசியுமிருக்கிறார். அவர் கூறியதன் சுருக்கம் வருமாறு... தண்ணீர் போத்தல் வியாபாரிகள் யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல வடமாகாணம் முழுவதையும் இப்பொழுது ஆக்கிரமித்து,நிறையப் பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். யாழ்ப்பாணத்துத் தண்ணீரைப் போல சுவையான தண்ணீர் ஓரிடமும் இல்லை என்று பேசப்பட்ட பல நூறு ஆண்டு வரலாறு பாழடைந்து விட்டது.

யாழ்ப்பாணத்துக் கிணற்று நீரைக் குடிக்கலாமா? இது பற்றி உடனடியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை சார்ந்தவர்கள், விவசாயத் துறை சார்ந்தவர்கள், பொருளியல் துறை சார்ந்தவர்கள், அரசியல் பிரமுகர்கள் ஒன்று கூடித் தெளிவுபடுத்த வேண்டும். குடா நாட்டில் மக்கள் குடிநீரை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது சம்பந்தமாக ஒரு தெளிவுறுத்தல் கூட்டத்தை நடத்தி ஊடகங்கள் ஊடாக தண்ணீரைப் பாவிக்கலாமா? என்ன செய்யலாம்? போத்தல் தண்ணி கலாச்சாரம் தான் இனி எங்களுடைய கலாச்சாரமா? அந்த போத்தல் எங்கிருந்து உற்பத்தி ஆகிறது? எப்படி யாழ்ப்பாணத்திற்கு விற்பனைக்கு வந்து சேருகிறது? என்பவற்றைத் தெளிவுபடுத்துங்கள்''.

ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு கேட்டு கிட்டத்தட்ட இரண்டு மாதங்களின் பின் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் தேதி ஒரு செய்தி வெளிவந்தது. அதில் வடமாகாணத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் பாதுகாப்பானதா என உறுதிப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது. வடமாகாண நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை வடக்கு மக்களுக்கு விநியோகிக்கும் குடிநீர் பாதுகாப்பானதா என்பது தொடர்பில் ஒரு வாரத்துக்குள் அறிக்கை தர வேண்டும் என்றும் பிரதேச சபைகள் ஊடாக வழங்கப்படும் குடிநீர் தொடர்பிலும் அறிக்கை தருமாறும் ஆளுநர் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அச்செய்தி கூறுகிறது.

மேலும் வடமாகாணத்தில் பொது மக்களுக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பிரதேச சபைகள், மாகாண மற்றும் மத்திய அமைச்சின் கீழ் செயல்படும் அனைத்து நிறுவனங்களும் 13 வாரத்துக்கு ஒரு தடவை குடிநீரின் தர நிர்ணயம் தொடர்பில் அறிக்கை வழங்க வேண்டும் என்றும் ஆளுநர் கேட்டுள்ளார்.

அது மட்டுமல்லாது வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தொடர்பில் ஆய்வு அறிக்கை வழங்க வேண்டும் என்றும், குறித்த செயற்பாட்டினை வடக்கு மாகாண பிரதம செயலாளர் உள்ளூர் ஆட்சி அமைச்சின் செயலாளர், மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் கண்காணிக்க வேண்டும் என்றும் ஆளுநர் பணித்துள்ளதாக அச்செய்தி மேலும் கூறுகிறது

ஆறு.திருமுருகன் கூறுவது போல, ஒருகாலம் கோயில் கிணற்று நீரைத் தீர்த்தம் என்று குடித்த மக்கள் இப்பொழுது தண்ணீர்ப் போத்தல்களை விரும்பி நுகர்ந்து வருகிறார்கள். தண்ணீர்ப் போத்தல் கலாச்சாரத்தால் முதலாவதாக, உள்ளூர்க் கிணறுகளில் உள்ள தண்ணீர் சுத்தமற்றது என்று நிராகரிக்கப்படுகிறது.

இரண்டாவதாக,பிளாஸ்டிக் பிரயோகம் அதிகரிக்கிறது. மூன்றாவதாக, போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீர் விரயம் செய்யப்படுகிறது.



எவ்வாறெனில்,ஒரு போத்தலில் வழங்கப்படும் தண்ணீரை அனைவரும் முழுமையாக அருந்துவார்கள் என்று இல்லை. ஒருவர் அருந்திய போத்தலை இன்னொருவர் அருந்த மாட்டார். அதனால் மிச்சம் விடப்படும் நீர் விரயமாகிறது. நாலாவது, தண்ணீர் போத்தல் பாவனையால் தென்னிலங்கை முதலாளிகள் லாபம் ஈட்டுகிறார்கள். ஐந்தாவது, பாவனையில் உள்ள தண்ணீர்ப் போத்தல்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி உற்பத்தி செய்யப்பட்டவையா என்பதனைத் தொடர்ச்சியாக யார் கவனிப்பது?

தண்ணீர்ப் போத்தல் எனப்படுவது உதிரியானது அல்ல. அது ஒரு உலகப் பொது நடைமுறை.அது ஒரு கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றது. அது நகரமயமாதல், உலக மயமாதலின் விளைவு. நமது கொண்டாட்டங்களை, நிகழ்வுகளை மண்டபங்களில் ஒழுங்குபடுத்தும் போது அந்த மண்டபத்துக்குரிய பக்கேஜுக்குள் தண்ணீர் போத்தலும் அடங்கும். எனவே தண்ணீர்ப் போத்தல் கலாச்சாரம் என்பது உள்ளூர் வளங்களை நிராகரிக்கும் உலகமயமாதலின் விளைவுகளில் ஒன்று.

எப்பொழுது மனிதர்கள் ஃபாஸ்ட் பூட் கலாச்சாரத்துக்கு பழக்கப் பட்டார்களோ, எப்பொழுது மனிதர்கள் பேரங்காடிகளின் நுகர்வோராக மாறினார்களோ, அப்பொழுதே தண்ணீர்ப் போத்தலும் நமது வாழ்வில் ஒரு பகுதியாக, எமது நிகழ்வுகளின் ஒரு பகுதியாக எமது கொண்டாட்டங்களில் ஒரு பகுதியாக மாறி விட்டது. எனவே தண்ணீர்ப் போத்தலை நிராகரிப்பது அல்லது உள்ளூர்க் கிணறுகளுக்குத் திரும்பிச் செல்வது என்பது ஒரு விதத்தில் உள்ளூர் மயமாதல், அல்லது உலக மயமாதலின் தீய விளைவுகளை நிராகரித்தல் என்ற ஒரு புதிய பண்பாட்டுப் போக்கிற்குள் அடங்கும். எனவே தண்ணீர்ப் போத்தல்களுக்குப் பதிலாக உள்ளூர்க் கிணறுகளை நோக்கித் திரும்புங்கள் என்ற அழைப்பு தனிய ஒரு மதப் பெரியார் ஆகிய ஆறு திருமுருகனிடமிருந்து வந்தால் மட்டும் போதாது. அது ஓர் அரசியல் அது ஒரு புதிய பண்பாட்டுக்கான அழைப்பு. அது ஒரு புதிய வாழ்க்கை முறைக்கான அழைப்பு. எனவே அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.

உள்ளூர் வளங்களை நிராகரித்தல் அல்லது அவமதித்தல் அல்லது உள்ளூர் வளங்களை உலகத் தராசுகளில் வைத்து நிறுத்தல் என்பது ஈழத் தமிழர்களுக்கு மட்டும் உரிய ஒரு போக்கு அல்ல.உள்ளூர் நீர் மூலங்கள் அசுத்தமானவை அல்லது உலக சுகாதார அளவுகோள்களின் ஊடாக பரிசோதிக்கப்படாதவை என்ற கருத்து படித்த தமிழர்கள் பலர் மத்தியில் உண்டு.

குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் விடுமுறைக்கு நாடு திரும்பும்போது ஒரு கையில் தண்ணீர் போத்தலோடு தான் வருகிறார்கள். தண்ணீர் போத்தலோடு தான் எங்கும் திரிகிறார்கள். அவர்கள் தங்கும் வீடுகளில் அவர்களுக்கென்று போத்தல் தண்ணீரை உறவினர்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். அவர்கள் உள்ளூர் கிணற்று நீரை நுகர மாட்டார்கள். எந்த நீரில் அவர்கள் பிறந்தார்களோ, எந்த நீரில் அவர்கள் வளர்ந்தார்களோ, அந்த நீரையே அவர்கள் இப்பொழுது சுகாதாரமற்றது என்று நிராகரிக்கக் காண்கிறோம்.

எனவே உள்ளூர் வளங்களையும் உள்ளூர் அறிவையும் உள்ளூர்த் தனங்களையும், உள்ளூர்ப் பண்பாடுகளையும் உள்ளூர்ச் சாப்பாட்டையும் மேலுயர்த்தும் ஒரு கூட்டுச் செயற்பாட்டின் ஒரு பகுதி தான் உள்ளூர் நீர் மூலங்களுக்கு திரும்பிச் செல்வது என்பது. அதைத் தனியாக ஒரு ஆறு திருமுருகன் மட்டும் செய்ய முடியாது. சம்பந்தப்பட்ட திணைக்களங்களும், துறை சார் நிபுணர்களும், சமூகத்தின் எனைய கருத்துருவாக்கிகளும், ஏனைய மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் இணைந்து அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.

மிகக் குறிப்பாக ஆறு திருமுருகன் தன் அறிக்கையில் கேட்டிருந்தது போல யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள துறைசார் நிபுணர்கள் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் நீர் மூலங்கள் சுகாதாரமானவையா என்பதனை நிரூபிக்க வேண்டும். அதே சமயம் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வெளியில் இருந்து வரும் தண்ணீர் போத்தல்கள் சுகாதாரமானவையா என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.

உள்ளூர் நீர் மூலங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் சந்தேகங்களை நீக்க வேண்டிய பொறுப்பு இச்சமூகத்தில் வாழும் துறைசார் நிபுணர்களுக்கு உண்டு. இது தொடர்பில் ஏற்கனவே உள்ளூர் துறைசார் நிபுணர்கள் கவனிக்கத் தவறிய ஒரு விடயத்தை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். ஒரு காலம் யாழ்ப்பாணத்தின் அடையாளமாக போற்றப்பட்டது முள்முருக்கு. ஆனால் இப்பொழுது நாட்டில் முள்முருக்கு அரிதாகி விட்டது. முள்முருக்கை ஏதோ ஒரு நோய் தாக்கியது. அதன் விளைவாக அதன் இலைகள் சுருளத் தொடங்கின. இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழகமும் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் யாராவது ஏதாவது நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா?

முள்முருக்கு எனப்படுவது நமது திருமண வீடுகளில் கன்னிக்காலுக்கு பயன்படுத்தப்படுவது. இப்பொழுது பாரம்பரிய முள்முருக்கு இல்லாத காரணத்தால் சோடினை முள்முருக்கை நாங்கள் பயன்படுத்தத் தொடங்கி விட்டோம். இனி ஒரு காலம் பிளாஸ்டிக் முள்முருக்கையும் பயன்படுத்த வேண்டி வருமா?

முள்முருக்கு, தமிழ் மக்களின் பாரம்பரிய நீர் மூலங்கள் போன்றவை தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் பொதுவெளியில் உரையாட முன்வர வேண்டும். இது தொடர்பில் வரும் சனிக்கிழமை 11ஆம் தேதி யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய நிலையத்தில் ஒரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு நூல் வெளியீடு. கலாநிதி ஆறு திருமுருகன் எழுதிய திருக்கேதீஸ்வர இலக்கியம் என்ற ஒரு நூலை வெளியிட்டு வைக்கும் அந்நிகழ்வில் பொறியியலாளர் சர்வராஜா நினைவுப் பேருரை ஆற்றுகிறார்.

யாழ் நீர் வளங்களின் மீதான ஆபத்துக்களும் வாய்ப்புகளும்'' என்பது அந்த நினைவுப் பேருரையின் தலைப்பு ஆகும். தமிழ் மக்களின் உள்ளூர் நீர் மூலங்களின் மீதான விழிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அது போன்ற கருத்தரங்குகளை ஆர்வமுள்ளவர்கள் ஒழுங்குபடுத்த வேண்டும்.இது ஒரு பொது விவாதமாக மாற்றப்பட வேண்டும். குடிக்கும் நீரின் நல்லது கெட்டது தெரியாத ஒரு சமூகமா நாங்கள்?

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஆபத்தை விஞ்சிய வாழ்வின் ஏக்கம்!

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- பகவான் சிங் -

தமிழகத்தின் அகதி முகாம்களில் தங்கியுள்ள ஆறு இலங்கைத் தமிழர்கள் இரகசியமாக நியூசிலாந்து செல்ல முயன்ற போது பிடிபட்ட செய்தி கேட்டு மிகுந்த மன வேதனையடைந்தேன். கைது செய்யப்பட்டவர்களில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஹோசூர் கெலவரப்பள்ளியில் உள்ள அகதிகள் முகாமில் தங்கியிருந்த நாற்பது வயதான புவனேஸ்வரி என்ற பெண்மணியும், அதே முகாமைச் சேர்ந்த பதினெட்டு வயது இளைஞன் தினேஜீம் அடங்குவர்.



வேளாங்கன்னி கடற்கரையில் ஒரு மோட்டார் படகில் அவர்கள் பயணிக்கப் போவதாகக் கிடைத்த துப்பின் அடிப்படையில், கடந்த புதனன்று இரவு, தமிழ்நாடு காவல் துறையின் கியூ பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு வெற்றிகரமான பயணத்தையும் நியூசிலாந்தில் நல்ல வேலைகளையும் பெற்றுத் தருவதாக உறுதியளித்துப் பெரும் தொகையை விலை பேசியிருந்த மூன்று முகவர்களும் கைதாகியுள்ளனர். அந்த முகவர்களும் தமிழகத்தின் வெவ்வேறு அகதி முகாம்களைச் சேர்ந்த ஈழத் தமிழர்கள் என்றும், இந்தப் பயணத்துக்காகப் பதிவு செய்யப்படாத ஒரு படகின் சொந்தக்காரரான, பூம்புகாரைச் சேர்ந்த செல்வம் என்பவரைத் தொடர்பு கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

செல்வத்திடம் வழங்க, இந்த ஆறு அகதிகள் வைத்திருந்த ரூ.17 இலட்சத்தைக் காவல் துறை கைப்பற்றியுள்ளது. அவரையும் கைது செய்துள்ளது. இந்த ஆறு பேரும் சில நாட்களுக்கு முன்னர், தங்கள் முகாம்களை விட்டு வெளியேறி, வேளாங்கன்னியிலுள்ள ஒரு விடுதியில் தங்கியுள்ளனர். விசாரணையில், மாதா கோயிலுக்கும் நாகூர் தர்காவிற்கும் பெயர் போன அந்த ஊரிலேயே இன்னொரு விடுதியில் அந்த முகவர்கள் தங்கியிருப்பது தெரிய வந்தது.

அந்த ஆறு அகதிகளும் எதிர்காலத்தில் இதுபோன்ற சாகசச் செயல்களில் ஈடுபட வேண்டாம் என்ற கடும் எச்சரிக்கையுடன் அவரவர் முகாம்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும், அந்த மூன்று முகவர்களும் காவல் துறையினரின் பிடியில் உள்ளதாகவும் இவர்கள் வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களா என்றும், மனிதர்களைக் கடத்தும் கும்பலுடன் தொடர்பு இருக்கிறதா என்றும் விசாரணை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

கடல் கடந்து செல்ல ஆபத்தான படகுகளை நம்பிப் பயணிக்கும் போக்கும், அவுஸ்திரேலியாவில் வளமான எதிர்காலத்தை எதிர்பார்த்துச் செல்லும் ஆர்வமும் முகாம்களில் நடத்தப்படும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களுக்குப் பிறகு, அகதிகளிடையே பெருமளவு குறைந்துள்ளன. ஆனால், இப்போதைய சம்பவம், இந்த முகவர்கள் மீண்டும் செயல்படத் தொடங்கியிருப்பதைக் காட்டுகிறது என்கிறார் சென்னை எழும்பூரில் உள்ள ஈழஅகதிகள் மறுவாழ்வு அமைப்பான (OfERR -Organisation for Eelam Refugees Rehabilitation) ஓபரைச் சேர்ந்த பத்ம நாதன்.

தமிழினப் படுகொலையை அடுத்து, இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் இருந்த, தந்தை செல்வாவின் மகனும் வழக்கறிஞருமான எஸ். சி.சந்திரஹாசனால், 1984இல் தொடங்கப்பட்டது இந்த 'ஓபர்' அமைப்பு. தமிழீழ மக்களின்மீது கொண்ட பற்றால் சந்திரஹாசன் இலங்கை அரசு, விடுதலைப்புலிகள் இயக்கம் இரண்டாலும் வெறுக்கப்பட்டவர். தமிழக அரசால் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 110இற்கும் அதிகமான அகதி முகாம்களில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு 'ஓபர்'அமைப்பு உதவியுள்ளது.

ஒரு பத்திரிகையாளனாக நான் பல முறை சந்திரஹாசனைச் சந்தித்துள்ளேன். இலங்கைத் தமிழர்களின் துயரங்கள் குறித்த உண்மையான கவலை கொண்டவர் அவர். முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உணவு, சுகாதாரம், கல்வி ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பெற்றுத் தருவதிலும் அவர் பெரும் பங்காற்றியுள்ளார். ஒவ்வோர் அகதியும் தாயகம் திரும்பவே விரும்புகிறார் என்று அவர் ஒருமுறை கூறியிருக்கிறார்.

அதேநேரத்தில், பெருங்கடலின் ஆபத்தைத் தாண்டிய வளமான வாழ்வுக்கு ஏங்குவோரும் உள்ளனர் என்பதையும் அவர் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளார். அகதி முகாம்களில் தங்கியிருந்த பல இளைஞர்கள் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி பெறவும் பெண்களுக்குக் கூடுதல் வருவாய் ஈட்டித் தரக்கூடிய சவர்க்காரம் மற்றும் ஸ்பைருலினா தயாரிப்பு முறைகளைக் கற்றுக் கொண்டு சிறுதொழில் செய்யவும் உதவியுள்ளார். இலங்கையில் நிலைமை சற்று சீரடைந்த போதெல்லாம் அகதிகள் மீண்டும் தாயகம் திரும்பவும் உதவியுள்ளார்.

கடல் கடந்து வளமான வாழ்வுக்கு ஆசைப்பட்டு, அபாயத்தில் சிக்கிக் கொள்வதிலிருந்து அகதிகளைப் பாதுகாக்க அவர் எடுத்த முயற்சிகளில் தமிழக, அவுஸ்திரேலிய அரசாங்கங்களின் சட்ட அமலாக்க அமைப்புகளுடன் கைகோர்த்துப் பணியாற்றியதைக் குறிப்பிடவே இங்கு 'ஓபர்' அமைப்பைப் பற்றிக் கூறினேன்.

இந்த ஆபத்தான பயணங்கள், கைதுகள் பற்றிய செய்திகளைச் சேகரிக்கும் பணியில் ஒருமுறை நான், படகு கவிழ்ந்ததாலோ அல்லது உணவு மற்றும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் அளவுக்கு எஞ்சின் செயலிழப்பாலோ 600க்கும் மேற்பட்ட அகதிகள் கடலிலேயே மடிந்துள்ளனர் என்று குறிப்பிட்டேன். இந்த அபாயங்களையும் தாண்டி, அக் கரையில் உள்ளவளமான வாழ்வின் விருப்பம் உந்த, ஏற்கெனவே சென்றவர்களின் வெற்றிக் கதைகள் உந்த, இந்த ஆசைக்கு அடிபணிந்து அந்த நாடுகளில் குடியுரிமை பெற முயற்சிகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.எளிதில் ஏமாந்து விடக்கூடிய இந்த எளியவர்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்தும் முகவர்களும் இதில் பாதுகாப்பான பயணத்துக்கான உறுதியளித்து, மிகப் பெரிய பங்காற்றுகின்றனர். அவுஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளிலிருந்து பேசுவது போலப் போலியாக நடித்து, அகதிகளின் நம்பிக்கையைக் கூட இந்த முகவர்கள் பெறுவதுண்டு என்று காவல் துறையினர் கூறக் கேட்டிருக்கிறேன்.



அப்போதுதான் அவர்கள் தங்கள் சொத்துகளை விற்றோ, கடன் வாங்கியோ அதிக தொகை செலுத்து வார்கள் என்பது அவர்கள் திட்டம். கடந்த ஆண்டு ஒக்ரோபர் – நவம்பரில் சட்ட விரோதமாக கனடா செல்ல விரும்பிய 303 இலங்கையினர் புறப்பட்ட 'லேடி ஆர் 3' என்ற கப்பலுக்கு நேர்ந்த கதி உங்களுக்கு நினைவிருக்கலாம். வியட்நாம் அருகே மோசமான வானிலை மற்றும் எஞ்சின் செயலிழப்பு காரணமாகக் கப்பலை விட்டு ஓடி விட்டனர் அதன் கப்டனும் குழுவினரும். நடுக் கடலில் தத்தளித்த கப்பலில் பசி, தாகம், உயிர் பயத்துடன் தவித்த மக்களை சர்வதேச முயற்சிகள் தாம் காத்தன. அப்போதிலிருந்து, அவுஸ்திரேலியா அல்லது கனடா செல்வதற்கான மேலும் சில குழுக்களின் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

இலங்கையில் 2021 பிற்பகுதியில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேட் டுக்குப் பிறகு, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா மற்றும் இந்தியப் பெருங்கடலின் பிரெஞ்சு, பிரிட்டிஷ் பிராந்தியங்களுக்குச் செல்லும் சட்ட விரோதமான முயற்சிகள் அதிகரித்து வருவதாக இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இலங்கையில் நிலைமை சீராக இருந்திருந்தால், இப்படி ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கடலில் மூழ்கி மாண்டிருப்பார்களா? நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் சிங்களத் தலைவர்கள் சமமாக நடத்தி, சம வாய்ப்பளித்திருந்தால், ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள், ஈழப்போரில் மடிந்தும், தமிழகத்தின் அகதி முகாம்களில் அடைக்கப்பட்டும் இருப்பார்களா?

இந்தியாவில் முதலீடுகளை ஈர்க்க இந்திய அரசு அமைத்த ஓர் அமைப்பான 'இன்வெஸ்ட் இன்டியா'-வின் தலைவரான தீபக் பக்ளாவின் ஒரு காணொலியை அண்மையில் பார்த்தேன். உள் நாட்டு, வெளிநாட்டுச் சவால்களைத் தாண்டி, கடந்த பல ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எப்படி வளர்ந்து வந்துள்ளது என்பதற்கான புள்ளி விவரங்களை அவர் அதில் அடுக்குகிறார். இறுதியில், எதிர்காலம் இந்தியாவினுடையது என்று முடிக்கிறார். எங்கள் ஜி. டி. பி.-யின் கதையை உங்களுக்குச் சொல்கிறேன் என்று தொடங்குகிறார் இன்வெஸ்ட் இன்டியாவின் தலைவர்.

முதல் ட்ரில்லியனை எட்ட 67 ஆண்டுகளாயின, இரண்டாவது ட்ரில்லியனை எட்ட எட்டு ஆண்டுகளாயின. மூன்றாவது ட்ரில்லியனை எட்ட ஐந்து ஆண்டுகளாயின. நான் (இந்தியா) எப்படி முன்னேறுகிறேன் என்று தெரிகிறதா? சுவாரஸ்யமான ஒரு விஷயத்தை உங்களுக்குச் சொல்கிறேன். 2015 முதல் இப்போது வரை, எங்கள் ஒன்பது ஆண்டுகள். ரஷ்யா, இத்தாலி, பிரேசில், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவற்றை முந்திக் கொண்டு பத்தாம் இடத்திலிருந்து ஐந்தாம் இடத்துக்கு எங்களது ஜி.டி. பியை முன்னேற்றியுள்ளோம். இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில், நான்காம் இடத்துக்கு வர ஜெர்மனியைக் குறி வைத்துள்ளோம்.

பெருந்தொற்றுக் காலத்துக்கு முன்னர், இந்த பூமியிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக நாம் இருந்தோம். பெருந்தொற்றுக்குப் பிறகு, பூமியிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக நாமே இருக்கிறோம். பெரியோர்களே, தாய்மார்களே, இந்தக் கதை இப்போது தான் தொடங்கியுள்ளது. இன்றிலிருந்து 9,000 நாட்களில் நான் (இந்தியா) 100 வயதை எட்டி விடுவேன். 2047 ஓகஸ்ட் 15. பூமியின் மிகப் பழைமையான நாகரிகம், ஆனால், மிகவும் இளமையான ஜனநாயகம். அதை அடிக்கடி மறந்து விடுகிறோம்.

அன்றைய தினம், உலகின் உழைக்கும் வர்க்கத்தினரில் 21 சதவிகிதம் இந்தியர்களாக இருப்போம். உலகின் நடுத்தர வர்க்கத்தினரில் 20 சதவிகிதம் இந்தியர்களாக இருப்போம். இதுதான் புதிய இந்தியா.'' மும்பையில் ஸ்ரான் டர்ட் சார்டர்ட் வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ட்ரெஷரி லீடர்ஷிப் போரம் 2023' நிகழ்ச்சியில், இந்தியாவின் வணிக, தொழில்துறை ஜாம்பவான்களிடையே தீபக் பக்ளா ஆற்றிய உரையின் பகுதி இது.

இதையெல்லாம் எதற்காக இங்கு குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் கேட்கலாம். பக்ளாவின் உரையை இங்கு எதற்கு நான் நினைவு கூருகிறேன்? நாம், அதாவது நீங்களும் நானும் வெறும் அண்டை நாட்டவர் மட்டுமல்லர். பண்டைய தொப்புள்கொடி உறவால் பிணைக்கப்பட்ட இரட்டையர்கள் நாம். சில காலம் முன்னர் வரை, சிங்கப்பூரை முந்தும் அளவுக்கு வளரக்கூடிய ஒரு வளமான நாடாக இலங்கையை நாங்கள் பார்த்தோம்.

ஆனால், இன்று நேர்ந்திருக்கும் அவலத்துக்கு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்? இல்லை, இல்லை, நிச்சயமாக இல்லை. பழியனைத்தையும் அரசியல் தலைவர்கள் மீதே போடாதீர்கள். மக்களாகிய நீங்களும் இதில் பொறுப்பேற்க வேண்டும். நீங்கள் அமைதியாக இருந்தீர்கள். உங்கள் கண்ணெதிரில் நடந்த சீரழிவைக் கண்டு கொள்ளாமல் இருந்தீர்கள். உங்கள் மௌனம் மிகப் பெரிய பேரழிவைக் கொண்டு வந்தது. ஆனால், இப்போதாவது விழித்துக் கொண்டு, வடக்கில் இருக்கும் உங்கள் அண்ணனைப் பார்த்து வளரக் கனவு காணுங்கள். அதை அடைய முயலுங்கள்

# அமெரிக்க செனற்றின் அறிக்கையும் உள்ளூராட்சித் தேர்தலும்!



கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்

இலங்கையின் இன முரண்பாடானது பிராந்திய மற்றும் உலகளாவிய அரசியல் தளத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றதாக காணப்படுகிறது. அத்தகைய முக்கியத்துவம் இன முரண்பாட்டுக்கான தீர்வை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு உதவும் உலகளாவிய அனுபவங்களும் சர்வதேச சட்டங்களும் அமைந்திருப்பதுடன் உள்நாட்டில் பொறிமுறையிடமிருந்து தீர்வு சாத்தியமாகாது என்பதையும் புரிந்து கொண்டதன் விளைவும் அடிப்படைக் காரணமாக தெரிகிறது.

அதாவது உலகளாவிய வல்லரசுகளான அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், பிராந்திய நாடான இந்தியா இனப் பிரச்சினைக்கான தீர்வினை அல்லது தீர்வினை நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்துவன என்ற எண்ணம் ஈழத் தமிழரிடம் காணப்படுகிறது. அதனை



ஈழத்தமிழ் அரசியல் தரப்புக்கள் ஊக்குவிப்பதாகவும் தெரிகிறது. இலங்கைத் தீவு மீதான நலனை கொண்ட வல்லரசுகளும் அத்தகைய சூழலை ஏற்படுத்துவது போன்று அறிக்கையிடுவதனையும் அதனை கருத்தியல் தளத்தில் முதன்மைப்படுத்தும் ஆய்வாளர்களையும் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. இக்கட்டுரையானது சமகாலத்தில் அமெரிக்க-தென் .லங்கை, ஈழத்தமிழரது உறவிலுள்ள நகர்வுகளைத் தேடுவதாக உள்ளது.

முதலாவது, உலகில் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத அமைப்பை தோற்கடிப்பதற்கு அமெரிக்காவின் புலனாய்வுத் தகவல்களே உதவின என்பது எங்களுக்குத் தெரியும் என இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி 05.03.2023 ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது குறிப்பிடுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது நாடுகளுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு நீண்ட காலமாக தொடரும் நடவடிக்கையாகும்.

இதில் அமெரிக்கா மாத்திரமல்ல இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுடன் நீண்டகால பாதுகாப்பு உறவுகள் காணப்படுகின்றன. அந்நாடுகளுடன் போர்க்கலங்கள் வருவதும் கூட்டு ஒத்திகை நிகழ்வதும் வழமையான செயல்முறையாகவே உள்ளது. எல்லைகளை கடந்து இலங்கை தனது சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயல்பட்டிருக்காவிட்டால் இலங்கையால் விடுதலைப் புலிகளை தோற்கடித்திருக்க முடியாது. இவ்வாறான செயல்பாட்டினால் விடுதலைப்புலிகளின் ஆயத விநியோகத்தை முடக்க முடிந்தது. அவர்களின் நிதிதிரட்டும் நடவடிக்கையை முடக்கினோம். சர்வதேச அளவில் விடுதலைப் புலிகளை தடை செய்தோம் எனக்குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சர் மேலும் முக்கிய விடயம் ஒன்றினை வெளிப்படுத்தியிருந்தார்.

அதாவது விடுதலைப் புலிகளின் ஒன்பது (9) ஆயுதக்கப்பல்களை இலங்கைக் கடற்படை அழித்தது. இது இலங்கையின் புலனாய்வுப் பிரிவினர், அமெரிக்கப் புலனாய்வு பிரிவினருடன் ஒத்துழைத்ததன் காரணமாகவே சாத்தியமானது எனவும் ஊடகங்களுக்கு தெரிவித்தார். இது பற்றி 2013 களில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவுஸ்ரேலிய ஊடக மொன்றுக்கு தெரிவிக்கும் போது விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை ஆழ்கடலில் 2008-2009 வரையான காலப்பகுதியில் அழிப்பதற்கு அமெரிக்காவின் சற்றலைட் தொழிநுட்பத்தின் மூலமான உளவுத் தகவல்கள் மிக மிக உதவியாக அமைந்துள்ளது என்று தெரிவித்திருந்தார்.

அவரது வெளிப்படுத்துகையில் 12 ஆயுதக் கப்பல்கள் எனவும் அதில் ஆட்லரிகள் விமான எதிர்ப்பு பீரங்கிகள் மற்றும் மோட்டார் குண்டுகள் இலங்கை இராணுவத்தின் கையிருப்புக்கு சமமான அளவில் கொண்டு வரப்பட்டதெனவும் அவற்றில் அநேகமானவை வடகொரியாவின் தயாரிப்புக்கள் எனவும் அவை கிழக்காசிய திறந்த சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டதெனவும் தெரிவித்திருந்தார். அது மட்டுமன்றி அத்தகைய ஆயுதக்கப்பல்களது அமைவிடத்திதையும் நகர்வையும் அமெரிக்காவே புலனாய்வுத்துறைக்கு தெரியப்படுத்தியதெனவும் குறிப்பிட்டார். இதனை விட விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை டியாகோகாரியாவிலுள்ள அமெரிக்க இராணுவத் தளத்திலிருந்தே ஏவப்பட்ட ஏவுகணைகளாலே அழிக்கப்பட்டதாகவும் அதற்கான தகவல் உண்டு.

விடுதலைப் புலிகளின் வடகொரிய ஆயுதக் கொள்வனவுக்கும் சீனாவுக்கு தொடர்புள்ளது எனவும் அதனை சீனா இலங்கை புலனாய்வுத்துறைக்கு தெரியப்படுத்தியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஏறக்குறைய 200-300 மில்லியன் அமெரிக்க டொலருக்கு நிகரான ஆயுத்தளபாடங்கள் விடுதலைப்புலிகள் கொள்வனவு செய்திருந்ததாகவும் புலம் பெயர் தளத்திலிருந்து அத்தகைய நிதி திரட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இரண்டாவது, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துமாறு அமெரிக்க செனற்சபையின் வெளி விவகாரத்திற்கு பொறுப்பான குழு அறிவித்துள்ளது. அதன் பொப் மெனின்டிஸ் குறிப்பிடும் போது தேர்தலை தாமதிப்பது ஜனநாயக விரோத செயலாகவே கருதப்படும். மக்களின் குரலை பாதிக்கும் நடவடிக்கையானது அவர்களது உரிமைக்கு எதிரான வன்முறையாகவே கொள்ளப்படும் என தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துமாறு செனற் வலியுறுத்தியதுடன் இந்தியாவும் அத்தகைய நகர்வுகளுக்கான உரையாடலை வெளிப்படுத்த முயன்றதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் இரு நாடுகளும் தமது ஒத்துழைப்பினை பலப்படுத்துவதுடன் இலங்கையின் பாதுகாப்பு நிலைமையை தமக்கு சாதகமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவே தெரிகிறது. இதற்கு அமைவாக இந்தியா 4 பில்லியன் அமெரிக்க டொலரினையும் அமெரிக்கா 3.4 பில்லியன் அமெரிக்க டொலரினையும், இலங்கையின் பொருளாதார மீட்சிக்காக கொவிட்-19 தொற்றுக்கு பின்னர் வழங்கியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனைவிட இரு நாடுகளும் நன்கொடைகளை இலங்கையின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் விதத்தில் வழங்கியுள்ளன. இருந்த போதும் இலங்கைக்குள் அடிமட்டத்தில் அரசியல், பொருளாதார, மற்றும் சமூக விடயங்களை உருவாக்குவதில் அமெரிக்க செனற்றுக்கு உள்ள அக்கறையைப் பற்றிய புரிதல் அவசியமானதாக உள்ளது. அதிலும் தமிழ் மக்களுக்கு அமெரிக்காவின் நகர்வுகளை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமானதாகவுள்ளது.

ஒன்று, தென்னிலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை முன் வைப்பதில் சர்வதேச நாணய நிதியம் அதிகம் முயற்சிக்கின்ற போது சீனாவின் கடன் பற்றிய நகர்வுகள் சமதூரத்தில் நிகழ்ந்து கொண்டிருகிறது. அத்தகைய நகர்வுகளுக்குள் தென்னிலங்கை நகராது கட்டுப்படுத்தும் நோக்கில் செனற்றின் அறிக்கை அமைந்திருக்க வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது.

இத்தகைய அறிக்கையூடாக தென் இலங்கை இந்தோ-பசுபிக்குக்குள் கட்டுப்படவும் அமெரிக்க நலன்களுக்கு விரோதமாக நகராது இருக்கவும் செனற் திட்டமிட்டுள்ளதாகலே தெரிகிறது. அமெரிக்க ஜனநாகத்தை அமெரிக்க வாழ் கறுப்பரிடமிருந்தே விளங்கிக் கொள்ள முடியும். உலகளாவிய தளத்தில் அமெரிக்க ஜன நாயகத்தின் போலியை விளங்கிக் கொள்வது கடினமானதல்ல.

இரண்டு, உள்ளூராட்சித் தேர்தலினை உரிய காலத்தில் வைப்பதன் மூலம் அமெரிக்காவின் நலனுக்கான நகர்வுகள் சாத்தியமானதாக அமைய வாய்ப்பு அதிகமாகவே தென்படுகிறது. அதாவது மீளவும் வெதமுல்ல அரசியல் எழுச்சி பெறாது தடுக்கப்பட வேண்டுமாயின் அவர்களது இருப்பு முற்றாகவே தென்னிலங்கை அரசியலிலிருந்து அகற்றப்பட வேண்டும். அவர்கள் தற்போது வைத்துள்ள உள்ளூராட்சி மன்றுங்கள் மட்டுமல்ல உள்ளூராட்சி தேர்தல் மூலம் அவர்களது வாக்குப் பலம் அம்பலப்படுத்துவதுடன் வெதமுல்லையின் பாராளுமன்ற பலத்தையும் ஆட்டங்காண வைக்க முடியுமென செனற் கருதுகிறது.

அதாவது உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் மூலம் பாராளுமன்றத்தை கலைக்கவோ அல்லது மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களது இருப்பையே நெருக்கடிக்குள்ளாக்கவோ முடியுமென அமெரிக்க கருதுகிறது. இதன் மூலம் எதிர்காலத்தில் வெதமுல்ல அரசியல் எழுச்சியடையக் கூடாது என்பதே அமெரிக்க செனற்றின் நோக்கமாகும்.

ஜனாதிபதி இத்தேர்தலை நடாத்த முடியாத சூழலுக்கும் வெதமுல்ல ஆளும் தரப்பே பிரதான காரணமாக உள்ளது. அவ்வாறான ஒரு தேர்தல்கள் மொட்டின் எதிர்காலம் காணாமல் போய் விடும் என்பதே தற்போதுள்ள குழப்பமாகும். அதனால் தேர்தலை நடாத்தக்கூடாது என்பதில் பிடிவாதமாக வெதமுல்ல அரசியல் செயல்படுகிறது.

ஏறக்குறைய அமெரிக்காவாலும் வெதமுல்லை அரசியலின் நலன்களாலும் இழுபறிக்குள்ளாகும் நிலைக்குள்ளேயே ஜனாதிபதியின் இருப்பு அமைந்துள்ளது.

மூன்று, சீனாவுக்கு எதிரான ஆட்சியாளர்களால் இலங்கைத்தீவு கட்டப்பட வேண்டும் என்பதில் அதிக அக்கறையுள்ள நாடாக அமெரிக்கா விளங்குகிறது. இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை சீனாவின் பிடிக்குள்ளிலிருந்து மீட்டெடுப்பதே செனற்றின் வெளியுறவுக் குழுவின் நோக்கமாக அமைந்துள்ளது.

இந்து சமுத்திரத்தின் இருப்பு இலங்கைத் தீவை அதிகம் மையப்படுத்தியிருட்பபதனால் அமெரிக்க நலனுக்கு மட்டுமல்ல உலக வல்லரசுகளது நலனுக்குள் இலங்கைத்தீவு காணப்படுகிறது. அமெரிக்காவுக்கு எவ்வளவு முக்கியமோ, அதேயளவு முக்கியம் சீனாவுக்கும் இலங்கைத்தீவு பொறுத்து உண்டு. இதனால் எவ்வளவுக்கு இலங்கைத்தீவை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியுமோ அவ்வளவுக்கு இந்து சமுத்திரம் அந்த நாட்டின் நலன் பாதுகாக்கப்படும்.

எனவே இலங்கை மீதுள்ள அமெரிக்க கரிசனையானது நலன்சார்ந்த அரசியலாகவே உள்ளது. அதனை ஈழத் தமிழர்களும் அதன் அரசியல் செயல்பாட்டாளர்களும் புரிந்து கொள்வது அவசியமானது. வெளிப்படையாக உலகிலுள்ள அனைத்து வல்லரசு நாடுகளும் ஏதோவொரு நலனடிபப்டையில் இயங்குவதென்பது அரசியல் நியமமாகும். ஆனால் அதற்குள் எந்த தேரியங்களும் முழுமையாக தங்கியிருக்காதது மட்டுமன்றி உரிய வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தத் தவறுவதில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இந்தியாவை, சீனாவை, அமெரிக்காவை உதாசீனம் செய்யாது அதே நேரம் அடிமையாக செயல்படாத அரசியல் போக்கொன்று அவசியமானது. அதற்கான கட்டமைப்பு செயல்பாடும் ஈழத்தமிழருக்கு அவசியமானது. இதுவே தற்போதுள்ள நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் தேசியங்களது இருப்புக்கான உத்தியாகும்.

ஈழத்தமிழர் அதற்கான எந்தகைய உத்தியையும் கொண்டிருக்காத நிலை நீடிப்பதானது அபாயமானது. உலகிலுள்ள தேசியங்கள் தமது நலனைக் கட்டமைப்பது போல் ஈழத்தமிழரும் தமது நலன்களுக்கு அமைவான உத்திகளை உருவாக்குவதே அவசியமானது. கடந்த காலம் முழுவதும் அடைந்த தோல்விகளுக்குள் உலகம் நோக்கிய தெளிவான உத்தியில்லாத போக்கே அடிப்படைக் காரணமாகும். பிராந்திய அரசுகளையும் வல்லரசுகளையும் எதிர் கொள்வதற்கான உத்திகளை விடுத்து அத்தகைய அரசுகள் தீர்வுகளை பெற்றுத் தரும் என நம்பிக்கையூட்டுவது அரசியலாகவே மட்டும் அமையும்.

# உலகிலேயே மிகப்பெரிய தூபியை இலங்கையில் அமைத்தவர்கள் தமிழர்கள்!

இலங்கையில் அமைக்கப்பட்ட பௌத்த தூபிகளிலே மிகப் பெரிய தூபியை அமைத்தவர்கள் தமிழர்கள் என்றால் பலரும் ஆச்சரியப்படுவார்கள். இது உண்மையா எனவும் சந்தேகப்படுவார்கள். சந்தேகமே இல்லை. இலங்கையின் உலகின் மிகப்பெரிய தூபியைக் கட்டியவர்கள் தமிழர்கள் தான்.

இத்தூபி இலங்கையின் இரண்டாவது தலைநகரான புலத்தி நகரில் அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக அடர்ந்த காட்டுக்குள் இத்தூபி மறைந்து கிடந்தது. பல தடவைகள் நான் இத்தூபியைத் தேடிச் சென்ற போதும் இதை சரியாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்த தடவை இத்தூபியை தேடிக் கண்டு பிடித்து முழுமையாக ஆய்வு செய்யக் கிடைத்தது. இத்தூபியின் உயரம் 625 அடிகள். (192 மீற்றர்)

இயற்கையான ஒரு பாறையை மூடி இத்தூபி அமைக்கப்பட்டுள்ளது. இதன் செங்கல் சிதைவுகள் தற்போது சுமார் 100 அடி உயரம் வரை காணப்படுகின்றன. தூபியின் மேலே ஏறிப் பார்த்தபோது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. 100 அடி உயரத்தில் மரங்கள் நிறைந்த வட்டமான ஒரு நிலப்பரப்பு காணப்பட்டது. அது ஒரு உதைபந்தாட்ட மைதானத்தை விடப் பெரியது. இதன் நடுப்பகுதியில் ஒரு சிறிய தூபியைக் கட்டியுள்ளார்கள். சுமார் 500 அடி உயரமான பகுதிகள் உடைந்து விழுந்து விட்டன. 11 ஆம் நூற்றாண்டில் 1153-1186 வரையான 33 ஆண்டுகள் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு இலங்



கையை ஆட்சி செய்த பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் இத்தூபி கட்டப்பட்டுள்ளதாக குறிப்புகள் கூறுகின்றன.

இத்தூபி கட்டப்பட்ட வரலாறு பற்றி சூளவம்சம் பின்வருமாறு கூறுகிறது.

பராக்கிரமபாகு மன்னன் தென்னிந்தியாவுக்கு படையெடுத்து பாண்டிய நாட்டை வெற்றி கொண்டு திரும்புகையில் சிறை பிடிக்கப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட தமிழர்களை கொண்டே இலங்கையின் மிகப்பெரிய தூபியை அமைத்ததாகவும், இதனால் இத்தூபி தமிழ தூப (தமிழர் தூபி) எனப் பெயர் பெற்றதாகவும், கைலாச மலைக்கு அடுத்ததாக (இரண்டாவதாக) இத்தூபி உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது உலகின் மிகப்பெரிய தூபி என இரண்டு தூபிகளைக் குறிப்பிடுகிறார்கள். ஒன்று அனுராதபுரத்தில் உள்ள ஜேதவனாராம தூபி.

இதன் சுற்றளவு 174 மீற்றர் உயரம் 121 மீற்றர்

அடுத்தது தாய்லாந்தில் உள்ள நகோன் பதோம் தூபி. இதன் சுற்றளவு 235 மீற்றர். உயரம் 120 மீற்றர்.

புலத்தி நகரில் தமிழர் அமைத்த தூபியின் சுற்றளவு 600 மீற்றர். உயரம் 192 மீற்றர். இன்று உலகில் காணப்படும் மிகப்பெரிய இரண்டு தூபிகளை விட இன்னும் ஒரு மடங்கு பெரியது. தமிழர்கள் அமைத்த, உலகின் மிகப் பெரிய இத்தூபியின் பின்னணியில் பல மர்மங்கள் மறைந்து கிடப்பதை உணர்கிறேன். இப்படிப்பட்ட உலகின் மிகப்பெரிய தூபி இதுவரை காலமும் மக்கள் கண்களில் இருந்து மறைத்து வைக்கப்பட்டதன் காரணம் என்ன?

கட்டுரையாளர்:
வரலாற்று ஆய்வாளர்
கலாநிதி
என்.எஸ்.கே.திருச்செல்வம்



இத்தூபி பற்றிய கல்வெட்டுக்கள் எதுவும் இதுவரை கிடைக்காதது ஏன்? இத்தனை பெரிய தூபியைக் கட்டுவித்த மன்னன் பராக்கிரமபாகு இதுபற்றிய கல்வெட்டுக்கள் எதையும் பொறிக்கவில்லையா?

இலங்கையில் அனுராதபுரத்தில் உள்ள ஜேதவனாராம, அபயகிரி, மிரிஸ்ஸவெட்டி, லங்காராம, தூபாராம தூபிகள், பொலநறுவையில் ரன்கொத் விகாரை, கிரி விகாரை தூபிகள் யாவும் புனரமைக்கப் பட்டு மக்கள் வழிபட வகை செய்துள்ள அதே நேரம் தமிழர் தூபி மட்டும் கடந்த 2018 வரை புனரமைக்கப் படாதது ஏன்? (தற்போது புனரமைப்பு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன)

40 ஆண்டுகளுக்கு முன் கடந்த 1982 ஆம் ஆண்டு இதன் புனரமைப்பு வேலைகள் ஜப்பான் நாட்டு உதவியுடன் ஆரம்பிக்கப் பட்டு திடீரென இதன் வேலைகள் அனைத்தும் நிறுத் தப்பட்டது ஏன்?

சோழர் காலத்தில் இருந்த தமிழ் பௌத்தர்களுக்காக திருகோணமலையில் மிகப்பெரிய பௌத்த பள்ளியை அமைத்த சோழர் புலத்தி நகரில் இருந்த தமிழ் பௌத்தர்களுக்காக இந்தத் தூபியை ஏன் அமைத்திருக்க கூடாது?


## நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்

## NAINATIVU CANADIAN DEVELOPMENT SOCIETY

**Ontario not for profit corporation No: 1284680**
**Date of Issue of Letters, Patent: March 1996**
**80 Nashdene Road, C-70, Toronto Ontario. M1V 5E4**

### 2023ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்ட அறிவித்தல்!!!

**காலம்: 18-03-2023** **மாலை 5:30** **இடம்: தீபம் கலைக்கூடம்**

2022ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கை சமர்ப்பித்தல் அத்துடன் சங்கத்தின் வளர்ச்சிகருதிய ஆரோக்கியமான கலந்துரையாடலுடன் கூடிய கருத்துப்பகிர்வும், 2023 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை தேர்வு மற்றும் சங்கத்தின் எதிர்கால நலன் கருதி சிறப்பு சிந்தனைகளோடு கூடியநல் ஆலோசனை ஆண்டு பொதுக்கூட்டம்.

**பின்குறிப்பு:**
சங்கத்தின் 2022 ஆண்டுக்கான அங்கத்துவ பொது சந்தா (கூ100) பணத்தினை 17-03-2023 முன்னதாக செலுத்தி தங்களது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்தி இப்( 2023) பொதுக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம், அதற்கு பிற்பாடு செலுத்தப்படும் அங்கத்துவப்பணம் 2023ம் ஆண்டுக்கான அங்கத்துவ பொது சந்தாப்பணமாக கருதப்படும் என்பதனையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

**“ஊருக்கு பலமாய் உறவுகளாய் இணைவோம்.....வாரீர்.....”**

**இங்கனம்:**
நிர்வாகசபை
நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்.

**தொடர்புகளுக்கு:**

| தலைவர்: | செயலாளர்: | பொருளாளர்: | பத்திராதிபர்: |
|---|---|---|---|
| தி.பரமேஸ்வரன் | வி.விமலராஜா | ம.சிவநேசன் | ந.தயானந்தன் |
| 416 662 0130 | 647 991 1110 | 416 893 2717 | 647 829 8384 |

# மகிந்தா கொல்லாத நாய்கள்

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து நிலாந்தன்

கடந்த டிசம்பர் மாதம் யாழ்.பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தேன். வீதியை திடீரென்று குறுக்கறுத்து ஓடிய ஒரு தொகை நாய்களின் மீது மோதி விழுந்ததில் எனது கைவிரல் ஒன்று அறுந்து தொங்கியது. யாழ்.போதனா வைத்தியசாலையின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் எனது விரலைக் காப்பாற்றினார்.

நாய்களில் மோதிப் படுகாயம் அடைந்தவர்கள் மட்டுமல்ல, கோமா நிலைக்கு சென்றவர்களும் உண்டு என்று போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் சிறிய ஒழுங்கைகளில் கட்டாக்காலி நாய்கள் பெருகிவிட்டன.காலை வேளைகளில் எல்லாச் சிறிய தெருக்களிலும் நாயின் கழிவுகளைக் காணலாம்.

எனக்கு தெரிந்த ஒரு ஆசிரியை திருநெல்வேலி பகுதியில் உள் ஒழுங்குகளால் பாடசாலைக்கு செல்வதில்லை. ஏன் என்று கேட்டேன். காலையில் எழுந்து குளித்து வெளிக்கிட்டு அந்த வீதி வழியாக சென்றால் எங்கும் நாயின் கழிவுகளைக் காணலாம். அந்தக் கழிவுகளில் மொய்க்கும் இலையான் மோட்டார் சைக்கிள் கடக்கும் போது அப்படியே எழும்பி எங்களுடைய முகங்களிலும் மோய்க்கிறது. அருவருப்பாக இருக்கும். அதைத் தவிர்ப்பதற்காக பிரதான சாலைகளின் ஊடாக பாடசாலைக்குச் செல்கிறேன் என்று சொன்னார்.

அவர் குறிப்பிட்ட அந்த வீதி வழியாக நான் அடிக்கடி காலை வேளை போய் வருவேன். அப்பொழுதெல்லாம் சந்தைக்குக் கறிப்பிலையைச் சுமந்து செல்லும் வியாபாரிகளை கண்டிருக்கிறேன்.

அவர்கள் கறிவேப்பிலைக் கிளைகளை சைக்கிள் கரியரில் வைத்துக் கட்டிக் கொண்டு போவார்கள். சைக்கிள் கரியரின் இரு பக்கமும் தொங்கும் கறிவேப்பிலைக் கிளைகள் வீதியைத் தொட்டுக் கொண்டு போகும். அந்த வீதி நெடுக நாயின் மலம் இருக்கும். அதை பார்த்ததிலிருந்து நான் சந்தையில் கறிவேப்பிலை வாங்குவதே இல்லை.

திருநெல்வேலி சந்தையில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான சந்தைகளில் வீதியோரங்களில் நாய் மலத்தைக் காணலாம். அந்த மலத்தில் மொய்க்கும் இலையான்கள் அப்படியே எழும்பி அந்த வீதியோரம் அமைந்திருக்கும் சாப்பாட்டுக் கடைகளிலும் மொய்க்கின்றன. ஆயின் நாம் சாப்பிடும் சாப்பாட்டின் சுகாதாரத்தை ஒரு முறை கற்பனை செய்து பாருங்கள்.

நாய் மலத்தை அகற்றுவது என்பது தெரு நாய்களை அகற்றுவது தான். தெரு நாய்களை ஏன் அகற்ற முடியவில்லை? அண்மையில் ஒரு நேர் காணலின் போது தெருநாய்களுக்கு உண†ட்டிய ஒருவர் கௌரவிக்கப்பட்டார். கனடாவில் இருந்து வந்த ஒரு நண்பர் அது தொடர்பாக பின்வருமாறு கேட்டார் தெருநாய்களைப் பராமரிப்பது நல்ல விடயம். ஆனால் எப்படிப் பராமரிக்க வேண்டும்? வளர்ச்சியடைந்த நாடுகளின் நகரங்களின் தெருநாய்களுக்குப் பராமரிப்பு நிலையங்கள் உண்டு. அப்படிப்பட்ட பராமரிப்பு நிலையங்களில் கொண்டு போய் நாய்களைச் சேர்ப்பது தான் அதற்குரிய வழி.மாறாக கட்டாக்காலி நாய்களைத் தெருக்களிலேயே வைத்து பராமரிப்பது என்பது மோசமான ஒரு நடைமுறை. அதைப் பாராட்டலாமா? என்று.

மாநகரங்களில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கென்று ஒரு பொறிமுறை உண்டு. அதற்கென்று பராமரிப்பு நிலையங்களும் உண்டு. தவிர தமிழகத்தில் செயல்படும் ப்ளூகுரூஸ்( BLUE CROSS) நிறுவனத்தைப் போன்ற தன்னார்வ நிறுவனங்களும் உண்டு. ஆனால் தமிழ்ப்பகுதிகளில் அவ்வாறு ஒரே ஒரு தன்னார்வ நிறுவனந்தான் உண்டு. நாய்களைத் தெருக்களில் விடுவது குறிப்பாக பெண் நாய்க்குட்டிகளைத்



தெருவில் விடுவது என்பது தமிழ்க் கலாச்சாரத்தின் சீரழிந்த ஒரு பகுதியாக பல தசாப்த காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. இது தொடர்பாக யோகர் சுவாமிகள் சமாதி அடைவதற்கு முன்பு தெரிவித்த ஒரு தகவலை ஒரு சமயப் பெரியார் எனக்குச் சொன்னார். ஒரு முறை மருதனாமடம் சந்தையில் யோகர் சுவாமிகள் குந்தியிருந்த போது, ஒரு சிறுவன் ஒரு பெட்டிக்குள் எதையோ காவிக் கொண்டு வந்திருக்கிறான். அப்பெட்டியை வைத்துக் கொண்டு நீண்டநேரமாக சுற்றுமுற்றும் பார்த்தபடி நின்றிருக்கிறான். நீண்ட நேரமாக அச்சிறுவன் வீதியில் நிற்பதைக் கண்ட யோகர் பெட்டிக்குள் என்ன என்று கேட்டிருக்கிறார். பெட்டிக்குள் பெண் நாய்க்குட்டிகள் உண்டு என்று அவன் சொல்லியிருக்கிறான். அவற்றை மருதனாமடம் சந்தையில் விடுமாறு சொன்னார்கள். ஆனால் அங்கே இருப்பவர்கள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள் என்பதனால், ஆளில்லாத வீதி ஓரத்தில் விடலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அவன் சொல்லியிருக்கிறான்.

இதைக் குறித்து பின்னர் தனது அடியார்கள் மத்தியில் உரையாற்றிய யோகர் பெண் நாய்களை இவ்வாறு தெருக்களில் அனாதைகளாக விடுவது ஒரு பாவம். அதன் கர்ம வினையை யாழ்ப்பாணம் ஒரு நாள் அனுபவிக்கும்…. யாழ்ப்பாணத்தவர்களும் ஒரு நாள் தெருவில் வந்து நிற்க வேண்டியிருக்கும் என்று மனம் நொந்து கூறியிருக்கிறார்.

ஆனால் யோகர் சுவாமிகளுக்கு முன்னரும் பின்னரும், இப்பொழுதும், பெண் நாய்க்குட்டிகள் தெருக்களில் விடப்படுகின்றன.

2015க்கு முன்புவரை இந்த நாய்களைப் பிடித்து கடலில் மூழ்கடித்துக் கொல்வார்கள். எமது சிறுவயது ஞாபகங்களில் நாய் வண்டி என்பது நம்மைப் பயமுறுத்தும் ஒரு வண்டி தான். இரண்டு பேர் அந்த வண்டியைத் தள்ளிக் கொண்டு வருவார்கள். பிடிபட்ட நாய்கள் சிறைக்கூண்டுக்குள் இருந்து கொண்டு எம்மைப் பரிதாபகரமாகப் பார்க்கும். யாழ் நகரப் பகுதியில் அவ்வாறு நாய் பிடிப்பதற்கு முழங்கை வரை ஒரு கை இல்லாத நகரசுத்தித் தொழிலாளர் ஒருவர் மாநகர சபையால் நியமிக்கப்பட்டிருந்தார். அவருடைய கையில் கம்பியாலான ஒரு சுருக்குத் தடம் இருக்கும். அந்த வண்டில் வீதியில் வரும்போது அவர் தன்னிடம் உள்ள தடியால் உள்ளே பிடிபட்டிருக்கும் நாய்களைக் குத்துவார். நாய்கள் கத்தும். அச்சத்தத்தைக் கேட்டு வீட்டிலிருக்கும் நாய்களும் தெரு நாய்களும் அந்த இடத்துக்கு வரும். அப்பொழுது அவர் நாய்களைப் பிடிப்பார்.சுருக்குக் கம்பியில் சிக்கி நாய் துடிக்கும் காட்சி பரிதாபகரமாக இருக்கும். அதை அப்படியே இழுத்து வண்டிக்குள் ஏறிவார். வளர்ப்பு நாய்களை எஜமானர்கள் காசு கொடுத்து மீட்பார்கள். ஆனால் அனாதைகளான கட்டாக்காலி நாய்கள் பின்னர் கடலில் மூழ்கடித்துக் கொல்லப்படும். அதன் பின் கொல்லப்பட்ட நாய்களின் வால்களை வெட்டி கொண்டு வந்து கணக்குக் காட்டி தங்களுக்குரிய கொடுப்பனவைப் பெறுவார்களாம்.

2015ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ நாய்களை அவ்வாறு கொல்வதற்குத் தடை விதித்து ஒரு சுற்று நிருபத்தை வெளியிட்டார். அதாவது 2009ஆம் ஆண்டு போர்க்களத்தில் சிக்கியிருந்த தமிழர்களை பூச்சி, புழுக்களைப் போல கொன்று யுத்தத்தை வென்ற ஒருவர், சரியாக ஆறு ஆண்டுகளின் பின் நாய்களைக் கொல்ல வேண்டாம் என்று உத்தரவிட்டார்.



அதன் பின் நாய்களைப் பிடிப்பவர்களுக்கு வேலையில்லாமல் போய் விட்டது. ஏனென்றால் பிடிக்கப்படும் நாய்களைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் உரிய பராமரிப்பு நிலையங்களை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இவ்வாறான ஒரு பின்னணியில் யாழ் மாநகர சபை பிடித்த நாய்களைச் சிறிது காலம் கல்லுண்டாய் வெளியில் கொண்டு போய் விட்டது. ஆனால் அந்த நாய்கள் அயலில் உள்ள கிராமத்தவர்களின் கால்நடைகளைக் கடிக்கத் தொடங்கியதும் அது ஒரு முறைப்பாடாக வந்தது. அதைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டது. அதன் பின் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படுவதில்லை.

கட்டாக்காலி நாய்களைப் பராமரிப்பதற்கென்று சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் ஒரு பராமரிப்பு நிலையத்தை ஆரம்பித்தார். ஆனால் அவரிடம் நாய்களைப் பிடிக்கும் ஏற்பாடு இல்லை. பிடிக்கப்பட்ட நாய்களை பராமரிக்கும் ஏற்பாடு தான் உண்டு.

அதிலும் போதிய வளங்கள் இல்லை. தனக்குப் போதிய நிதி உதவியோ, துறைசார் உதவிகளோ அல்லது குறைந்த பட்சம் தார்மீக உதவிகளோ கிடைக்கவில்லை என்று அவர் கவலைப் பட்டார். தனது பராமரிப்பு நிலையத்தின் தராதரம் குறித்து ஒரு பகுதியினர் எழுப்பிய முறைப்பாடுகளால் அவர் அதிகம் நொந்து போயிருந்தார்.

அவரைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் உள்ள தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவரும் ஒரு நாய் பராமரிப்பு நிலையத்தை உருவாக்க முற்பட்டார். அதைக் குறித்தும் விமர்சனங்கள் எழுந்தன. அவர் அந்த முயற்சியைப் பாதியிலேயே கைவிட்டார். இப்பொழுது சிவபூமி அறக்கட்டளையின் ஒரே ஒரு நாய் பராமரிப்பு நிலையந்தான் வடக்கில் உண்டு. அங்கேயும் போதிய வளங்கள் இல்லை. ஆதரவு இல்லை. ஆறு.திருமுருகன் பெரும்பாலும் சலித்துப் போய் விட்டார். அந்த பராமரிப்பு நிலையத்தை முடிவிடலாமா என்று யோசிக்கும் அளவுக்கு அவர் நொந்து போய் விட்டார்.

ஆனால் தென்னிலங்கையில் நாய்களைப் பராமரிப்பதற்கு பல நிலையங்கள் உண்டு என்று கூறப்படுகிறது.அவ்வாறு அம்பாந்தோட்டையில் காணப்படும் பராமரிப்பு நிலையத்துக்கு வேண்டுமானால் வடக்கிலிருந்து நாய்களைக் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் என்று உள்ளூராட்சி சபை நிர்வாகிகளுக்கு தெரிவிக்கப்பட்டதாக ஒரு தகவல் உண்டு.

மனிதகுல வரலாற்றில் மனிதனின் முதல் வளர்ப்புப் பிராணி நாய்தான். மனிதன் வேட்டையாடி உணவு தேடுபவனாக இருக்கும்போதே வேட்டைத் துணையாக நாய்கள் இணைந்தன. அதன் பின் நதிக்கரை நாகரீகங்களில் வீட்டு வளர்ப்பு பிராணிகளாக நாய்கள் மனிதர்களோடு காணப்பட்டன. நாய்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு பூர்வ காலத்திலிருந்தே தொடங்குகிறது. நன்றியுள்ளது

மனிதர்களைப் போல பழிவாங்காது. காவல் காப்பது என்றெல்லாம் போற்றப்பட்ட நாய்களை இந்துக்கள் வைரவக் கடவுளின் வாகனமாக உருவகித்து வைத்திருக்கிறார்கள். இவ்வாறு தமது காவல் கடவுள் ஒருவரின் வாகனமாகக் காணப்படும் நாய்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு யாருடையது? யோகர் சுவாமிகள் 1960களின் நடுப்பகுதியில் மனம் நொந்து கூறிய அதே நிலைமை தான் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டின் பின்னரும் இப்பொழுதும் காணப்படுகிறது. நாய்களைப் பராமரிப்பதற்குக் கூட ஒரு வளம் பொருந்திய நிலையத்தை உருவாக்க முடியாத மக்களா நாம்?

# சீனாவின் மூளை இயக்க கட்டுப்பாட்டு ஆயுதங்கள்!

சீனா மூளைச்சலவையில் கைதேர்ந்த நாடு என்பது பலரும் அறிந்ததே. Brain Washing (மூளைச்சலவை) என்ற ஆங்கிலச் சொல்லே முதன் முறையாக 1950ல் கொரியப் போரின் போது உபயோகிக்கப்பட்டது. அது சீன கம்யூனிஸ்ட் அரசு மக்கள் மனதை அரசுக்கு சாதகமாக மாற்ற உபயோகிக்கும் செயல் நுட்பத்தை குறிப்பதாகும். தற்போது சீன அரசின் ஆளுமையில் அந்த மூளைச்சலவை செயல்நுட்பம் வளர்ச்சி பெற்று மூளையின் இயக்கத்தையே கட்டுபடுத்தும் ஆயுதங்களாக மாறி வருகிறது.


சீன அரசு பொது மக்களை கண்காணிப்பதை எளிதாக்க ஒரு நபர், ஒரு கோப்பு என்ற மென்பொருளை சில ஆண்டுகளாக உபயோகித்து வருகிறது. முக்கியமாக, சின்ஜியாங் தன்னாட்சி பகுதியில் உய்குர் இன மக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அந்த மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. ஏற்கனவே, முக அடையாளம் காட்டும் மென்பெருளை பெருமளவில் உபயோகித்து சீன அரசு பொதுமக்களிடையே அரசுக்கு எதிரான சந்தேகத்திற்குரிய நபர்களை கண்டு அறிந்து வருகிறது.

முக அடையாளம் காட்டும் தொழில்நுட்பம் உலகெங்கும் பரவி தற்போது உபயோகத்தில் உள்ளது. கடந்த ஆண்டு மார்ச் 6-ந்தேதி வெளியான ஒரு செய்தியின்படி கொரோனா மகா மாரி தாக்கிய காலகட்டத்தில் முகக் கவசம் அணிந்த நபர்களை அடையாளம் காணும் நிறுவனத்தில் சீன மென்பெருள் இன்ஜினியர்கள், பணிபுரிந்து வருவது தெரியவந்தது.

மேலும், சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் ஹெஃபி நகரில் உள்ள ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) நிறுவனம், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களின் விசுவாசத்தை அளவிடக் கூடிய மென்பொருளை உருவாக்கியுள்ளதாக ஒரு VOA (வாய்ஸ் ஆப் அமெரிக்கா) செய்தி கூறுகிறது. அந்த செய்தியின் படி, 2021-ம் ஆண்டின் பிற்பகுதியில், ஹெனான் மாகாணத்தில் உள்ள அதிகாரிகள் சந்தேகத்திற்குரிய'' பத்திரிகையாளர்கள், வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோரை கண்காணிக்க அதேபோன்ற அமைப்பைத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

மேலும், ஷாங்காயில் அரசு தரப்பு வழக்கறிஞர்கள், செயற்கை நுண்ணறிவு தயாரித்த வழக்குரைகளை உபயோகிப்பதாகக் கூறப்படுகிறது. அத்தகைய வழக்குரைகளை கிரெடிட் கார்டுமோசடி மற்றும் வீதி சச்சரவு ஆகிய எட்டு கிரிமினல் குற்ற வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய உபயோகிக்கப்படும். தி பேப்பர் என்ற சீன ஆன்லைன் செய்தித்தாள் சிச்சுவானில் உள்ள ஒரு கம்யூனிஸ்ட் கட்சி பள்ளி 2017 ஆம் ஆண்டிலேயே ஸ்மார்ட் ரெட் கிளவுட் என்ற செயலியை உருவாக்கியுள்ளதாக கூறுகிறது.

ஏற்கனவே அந்த செயலியை உபயோகித்து, அரசியல் கல்விக்கான கட்சி உறுப்பினர்களின் எதிர்வினையை கண்காணிக்கவும் மற்றும், அவர்களின் விசுவாசத்தை கணக்கிடவும்'' முடிந்தது என்று அந்த செய்தி கூறுகிறது. சீனாவின் தொடர்ந்து முன்னேறி வரும் கண்காணிப்பு அமைப்புகளின் செயல்பாட்டால் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே, அவர்கள் இண்டர்நெட் தொடர்பு சாதனங்களையும் சமூக வலைத்தளங்களையும் உபயோகிப்பதில் பல்வேறு தடங்கல்கள் அனுபவித்து வருகிறார்கள். அரசின் கண்காணிப்பு அமைப்புகள் செயற்கை நுண்ணறிவின் உபயோகத்தை அதிகரித்து வருவது அவர்களிடையே மேலும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமை



வழக்கறிஞர்களில் ஒருவர் கூற்றின்படி துல்லியமான ஆனால் தீவிர கண்காணிப்பை மேம்படுத்துவதற்காக சீனாவின் காவல்துறை தனது காவலில் உள்ளவர்களின் கண்கள், கைரேகைகள் மற்றும் சிறுநீர் மாதிரிகளை சேகரித்து கைதிகளின் 'பயோ மெட்ரிக் பதிவுகளை சட்டவிரோதமாக செயல்படுவதாக கூறியுள்ளார்.

சீனா தனது கண்காணிப்பு செயல்முறைகளை செயற்கை நுண்ணறிவின் மூலம் விரிவபடுத்துவதை ஆய்வு செய்த மார்டின் பெரேஜா என்ற அமெரிக்க பொருளாதார உதவிப் பேராசிரியர் இது சீனாவின் எதேச்சாதிகர அரசியலின் தாக்கத்தை மேலும் அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், எதேச்சாதிகாரப் போக்குடன் செயல்படும் சீனாவின் நேச நாடுகளுக்கும் இத்தகைய கண்காணிப்பு முறைகளை ஏற்கனவே ஏற்றுமதி செய்து வருகிறது. அந்த நாடுகள் இடையேயும் அதன் தாக்கத்தின் விளைவுகளை ஏற்படுத்தும் என்று பெரேஜா கூறியுள்ளார்.

இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் இத்தகைய சீன கண்காணிப்பு முறைகள் எத்தகைய பாதிப்பை இந்தியாவுக்கு ஏற்படுத்தக் கூடும் என்பது நமது பாதுகாப்பு அமைப்புகள் சிந்திக்க வேண்டிய விஷயம். மேலும், சீனாவின் போலீஸ் மற்றும் குற்றவியல் செயல்பாடுகளில் முன்னேற்றம் காண, 21 செயற்கை நுண்ணறிவு (AI) ஆய்வு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இத்தகைய நிறுவனங்கள் அரசின் காண்ட்ரேக்ட்டுகளை பெறும்போது, அவர்களுக்கு பொது மக்களின் கண்காணிப்பு விவரங்களையும் பெற்றுக் கொள்வார்கள்.

மேலும், அந்த நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தை விரிவாக்க அரசாங்கத்துக்கு தயார் செய்த அந்த அல்காரிதம்களை உபயோகிக்கும் ஆபத்தும் இருக்கிறது என்று பெராஜா ஏழுயு ஊடக நிறுவனத்திடம் கூறியுள்ளார். உலகில் பல நாடுகளில் சீனாவின் கண்காணிப்பு பயன்பாட்டு முன்னேற்றத்தை கண்டு அத்தகைய முறைகளை தாங்களும் உபயோகிக்க தொடங்கியுள்ளனர் அது மட்டும் அல்லாமல், அத்தகைய பயன்பாட்டின் ஆராய்ச்சியிலும் அமெரிக்க ஆய்வு நிறுவனங்கள் ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளன.

சென்ற ஆண்டு டிசம்பர் மாதம், அமெரிக்க அரசின் வர்த்தக பிரிவு 12 சீன ஆய்வு நிறுவனங்கள் மீது காரணம் ஏதும் கூறாமல் தடை விதித்தது. அவற்றில் பெய்ஜிங்கில் உள்ள சீன ராணுவ மருத்துவ அறிவியல் கூடமும் (Academy of Military Medical Sciences) அடங்கும். வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை நிறுவன செய்தி அமெரிக்க அரசின் 2019-ம் ஆண்டு ஆவணங்களில் சீன அரசின் மூளையின் இயக்கத்தை கட்டுப்படுத்தும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதைப் பற்றிய சில திடுக்கிடும் தகவல்கள் தெரிய வந்ததாக கூறுகிறது.

இத்தகைய ஆய்வுகளின் குறிக்கோள் மூளையின் இயக்கத்தை கட்டுப்படுத்தும் ஆயுதங்களை உபயோகித்து போர்முனையில் எதிரிகளின் மூளையை இயங்கவிடாமல் செய்வதே ஆகும். வருங்கால போர்முனைகளில் மூளை கட்டுப்பாட்டு ஆயுதங்கள் மற்றும் அனுகுமுறைகள் நமது போர்ப்படைகளில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதைப் பற்றி நாம் இப்போதே சிந்திக்கவேண்டும்.

# வெள்ளை மாளிகையில் கௌரவிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் பெண் சட்டத்தரணி!



உலகின் துணிச்சலான பெண்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா வெள்ளை மாளிகையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். உலகில் துணிச்சலான பெண்களாக 2023 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பெண்களை கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளை மாளிகையில் நடைபெற்றது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்வு நடத்தப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டவர்களும் இம்முறை கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது 2021ஆம் ஆண்டு உலகின் துணிச்சலான பெண்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ரனித்தா ஞானராஜாவிற்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ரனித்தா ஞானராஜா இலங்கையின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக செயற்பட்டு வருகின்ற சட்டத்தரணி யாவார். இந்நிலையில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜாவிற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாகாணத்தில் உள்ள அயர் மாவட்ட கோர்ட்டின் நீதிபதியாக இந்திய வம்சாவளியை சேர்ந்த பெண் தேஜல் மேத்தா (Tejal Mehta) நியமிக்கப்பட்டு உள்ளார். இதுவே முதல் முறை இந்திய வம்சாவளியை சேர்ந்த ஒருவர் அயர் மாவட்ட கோர்ட்டு நீதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.



இதற்கு முன்பு தேஜல் மேத்தா (Tejal Mehta) அயர் மாவட்ட கோர்ட்டின் இணை நீதிபதியாக பணியாற்றினார்.

மாவட்ட கோர்ட்டு தலைமை நீதிபதி ஸ்டேசி போர்டெஸ் தேஜல் மேத்தாவுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிலையில் பதவியேற்ற போது, ஒரு வக்கீலாக இருந்தால் குறிப்பிட்ட கட்டத்தில் மட்டுமே பொதுமக்களுக்கு உதவ முடியும். அதுவே நீதிபதியாக இருக்கும் போது பல்வேறு உதவிகளை செய்யலாம் என மேத்தா கூறினார்..

# அணு மின்னிலையங்கள் சாத்தியமா?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ரஷ்யாவின் உதவியுடன், சிறியளவிலான அணுமின் நிலையங்களை அமைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறது அரசாங்கம். ஒரு பக்கத்தில் சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட பாரிய அனல் மின் நிலையங்கள் இருக்கத்தக்கதாக, இன்னொரு பக்கம், இந்தியாவின் அதானி குழுமத்தினால் பாரியளவில் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின் நிலையங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில், அணு மின் நிலையங்கள் அவசியமா என்ற கேள்வி இருக்கிறது.

முன்னொரு காலத்தில் இலங்கை முழுவதற்கும் நீர்மின் நிலையங்களே மின்சாரத்தை விநியோகித்துக் கொண்டிருந்தன. காலப்போக்கில் மக்கள் தொகை, தொழில்துறை வளர்ச்சிக்கேற்ப மின்சாரத்தில் தேவை அதிகரிக்க, நீர்மின் உற்பத்தி போதாது என்ற நிலை ஏற்பட்டது. அதன் பின்னர், எண்ணெய், நிலக்கரி மின் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இயற்கை எரிவாயு மின்நிலையங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டது.

அண்மைக்காலமாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளது. நிலக்கரி பயன்பாட்டை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமானால், சூரியசக்தி, காற்றாலை மின்சக்தி உற்பத்தி மட்டும் போதாது, சிறியளவிலான அணுமின் நிலையங்களும் தேவைப்படும். ஏனென்றால், நீர்மின் உற்பத்தி, காற்றாலை, சூரிய சக்தி மின் திட்டங்கள், அவ்வப்போது காலநிலை மாற்றங்களால் பாதிப்பை சந்திக்கும். இதனால் எந்தக் காலத் துக்கும் ஏற்ற அணுமின் உற்பத்தியின் மீது கவனம் செலுத்தப்படுகிறது.

அணுமின் நிலையங்களை அமைப்பதற்கு செலவு அதிகம் என்றாலும் மின்சார உற்பத்திச் செலவு மிக குறைவு. ஆசியாவிலேயே இரண்டாவது அதிக மின்கட்டணத்தை அறவிடும் நாடாக இலங்கை விளங்குகிறது. அதற்கு முழுக் காரணம், மின்சார உற்பத்திச் செலவின அதிகரிப்புத் தான். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைக் கொண்ட மின் திட்டங்களில் நேர காலத்துடனேயே கவனம் செலுத்தியிருந்தால், பெருமளவில் எண்ணெய், நிலக்கரி இறக்குமதிக்காக டொலர்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

எவ்வாறாயினும் தற்போது சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்திட்டங்களுக்கு இணையாக, அணுமின் திட்டங்களை அமைப்பது குறித்து அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறது. இந்தப் பேச்சுக்கள் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், 2018ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு பின்னர் கைவிடப் பட்டது. இப்போது இந்த திட்டத்தை முன்னெடுப்பதில் இலங்கையும் ஆர்வம் காட்டுகிறது, ரஷ்யாவும் ஆர்வத்தைக் கொண்டிருக்கிறது.

இதற்கு பூகோள அரசியல் காரணங்களும் இருக்கின்றன. தலா 100 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட இரண்டு சிறியளவிலான அணுமின் நிலையங்களை அமைப்பது குறித்து பூர்வாங்கப் பேச்சுக்கள் நடக்கின்றன என்பதை அணுசக்தி அதிகாரசபையின் தலைவர், பேராசிரியர் எஸ்.ஆர்.டி. றோசா உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ஆனால் அது தரையில் அமைக்கப்படுமா, கடலில் அமைக்கப்படுமா என்பதில் இன்னமும் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

சிறியளவிலான அணுமின் நிலையத்தை, தரையில் அமைப்பதானால், அதற்கு 5 ஆண்டுகள் தேவைப் படும். அதையே கடலில் மிதக்கும் அணுமின் நிலையமாக அமைப்பதாயின், 3 வருடங்களில் அமைத்து விட முடியும். இலங்கைக்கு மின்சாரம் தேவைப்படும் காலத்தைப் பொறுத்தே, அது தரையிலா கடலிலா என்பது பெரும்பாலும் தீர்மானிக்கப்படும். ஆனால் தரையில் இதனை அமைப்பதாயின், அதற்கெனத் தாங்கள் முன் வைக்கக் கூடிய மூன்று இடங்கள் என, அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கூறியுள்ள மூன்று இடங்களில் இரண்டு, வடக்கு, கிழக்கில் அமைந்திருக்கின்றன. வடக்கில் மன்னார், கிழக்கில் திருகோணமலை, தெற்கில் அம்பாந் தோட்டை ஆகிய இடங்களையே தாங்கள் அணு மின் நிலையங்களை அமைக்க முன்மொழியவுள்ளதாக அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கூறியிருக்கிறார்.



இது இன்னமும் திட்ட அளவிலான பரிசீலனையில் தான் இருக்கிறது. இன்னமும் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் முன்மொழியவுள்ள இடங்களில் மன்னாரும், திருகோணமலையும் இருப்பது, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கவலை கொள்ளும் ஒரு விடயமாக இருக்கும். ஏற்கனவே, திருகோணமலை சம்பூரில், 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு, 2007ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

அது நிலக்கரியினால், இயங்கக் கூடிய அனல் மின்நிலையம், அதற்கு சம்பூரில் காணிகள் கையகப்படுத்தப்பட்டன. அதற்கெதிராக தமிழ் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

தமிழ் மக்களின் எதிர்ப்பை அடுத்து, அந்த திட்டத்தை சூரிய மின்சக்தி திட்டமாக மாற்ற இந்தியா இணங்கியது. ஆனாலும் மின்சாரத்தை உற்பத்தி செய்து கூடுதல் விலைக்கு இந்தியாவின் அனல் மின் நிறுவனம் விற்க முனைவதாக குற்றம் சாட்டி கடைசியில் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டு விட்டது. இவ்வாறான நிலையில், திருகோணமலை அல்லது மன்னாரில், அணுமின் நிலையத்தை அமைக்க இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் இணங்குவார்களா என்ற சந்தேகம் உள்ளது. இன்றைய மின்சக்தி தேவையை ஈடுசெய்வதற்கு அணுமின் நிலையங்கள் பொருத்தமான, செலவு குறைந்த ஒரு வழியாக இருந்தாலும், அதன் ஆபத்துகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பல ஐரோப்பிய நாடுகளில் அணுமின் நிலையங்கள் முற்றாகவே மூடப்பட்டிருக்கின்றன.

அதேவேளை, இந்தியா புதிய அணு மின் நிலையங்களை உருவாக்கி வருகிறது. 2013ஆம் ஆண்டு கூடங்குளத்தில் அணுமின் நிலையத்தை செயற்பட வைப்பதற்கு இந்தியா கடுமையான எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டியேற்பட்டது.

ரஷ்யாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட அந்த திட்டத்துக்கு எதிராக பெரியளவில் உள்ளூர் மக்களின் போராட்டங்கள் இடம் பெற்றன. அந்த போராட்டங்களின் பின்னால், அமெரிக்கா இருந்தது என்ற குற்றச்சாட்டுகளும் அப்போது முன்வைக்கப்பட்டன. ஆனால், காலப்போக்கில் அந்தப் போராட்டங்கள், ஓய்ந்து போயின. அணுமின் நிலையத்தில் கசிவு ஏற்பட்டால், பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதை முன்னிலைப்படுத்தியே போராட்டங்கள் இடம்பெற்றன.


அப்போது, இலங்கையிலும் கதிர்வீச்சு ஆபத்துக் குறித்து கவலை எழுந்தது. கூடங்குளம் அணுமின் நிலையத்தினால் வடபகுதிக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் ஏற்பட்டது. அந்தக் கட்டத்தில் இந்தியாவுடன் பேச்சு நடத்திய அரசாங்கம், யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் கதிர் வீச்சை அளவிடும் கருவிகளை பொருத்தவும் நடவடிக்கை எடுத்தது. இவ்வாறான நிலையில் வடக்கு, கிழக்கில் அணுமின் நிலையங்களை அமைக்க முற்பட்டால், அது மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தக் கூடும். அதைவிட இலங்கைக்கு இன்னொரு சிக்கல் உள்ளது. அணுமின் நிலையங்களை அமைப்பதற்கு செலவு அதிகம் ஏற்படும். தற்போதைய நிலையில் அதில் முதலீடு செய்யக் கூடிய நிலையில் இலங்கை இல்லை.

இந்த நிலையில், பங்களாதேசுக்கு ரஷ்யா அமைத்துக் கொடுத்துள்ள அணுமின் நிலையத் திட்டத்தை பின்பற்ற இலங்கை முயற்சிக்கிறது. அணுமின் நிலையத்தை அமைத்து 15 ஆண்டுகளில் அதற்கான செலவினங்களை திருப்பிச் செலுத்தும் வகையில் உடன்பாடு செய்திருக்கிறது ரஷ்யா. அவ்வாறானதொரு உடன்பாட்டையே இலங்கையும் எதிர்பார்க்கிறது. அணு மின் நிலையங்களில் உள்ள முக்கியமான பிரச்சினை. அதன் கழிவுகள் தான். அணுமின் நிலையத்தில் ,ருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை கொட்டுவதற்கு இடம் தேவை. ரஷ்யாவே அதனை திருப்பி எடுத்துக் கொள்வதாக கூறியிருப்பதாக அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கூறி யிருக்கிறார். ஆனால் அது எந்தளவுக்கு சாத்தியம் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. ஏனென்றால், கூடங்குளத்தில் இருந்து ரஷ்யா அணு மின் நிலையக்கழிவுகளை எடுத்துக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.


அவ்வாறான நிலை இலங்கைக்கு ஏற்பட்டால், சிறிய நாடு அணுக் கழிவுகளால் பெரும் பாதிப்புகளை சந்திக்கும். ரஷ்யாவுக்கும் இலங்கைக்கு இடையில் இப்போது நல்லுறவு காணப்படுகிறது. ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் நாட்டின் சுற்றுலாத் துறையில் கால் பங்கை வகிக்கும் நிலை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில், இலங்கையுடன் வர்த்தக தொடர்புகளையும், பாதுகாப்பு உறவுகளையும் பேண ரஷ்யா முற்படுகிறது. ஆனால் அதற்கு முக்கியமானதொரு தடையாக அமெரிக்கா இருக்கும். இலங்கையில் அணுமின் நிலையத்தை சாட்டாக வைத்துக் கொண்டு ரஷ்யா இதற்குள் காலடி வைப்பதை அமெரிக்கா விரும்பாது. இவ்வாறான நிலையில், இந்த எதிர்ப்பை சமாளிக்கவே இந்தியாவை இதற்குள் கொண்டு வர வியூகம் வகுக்கிறது கொழும்பு. இந்த வியூகம் சரியாக அமைந்தால் தான் அணுமின் திட்டங்கள் இலங்கையில் சாத்தியப்படும்.




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! வழக்கு களில் சாதகமான சூழல் ஏற்படும். ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மன நிலை இருக்கும். செயல்திறன் அதிகரிக்கும் நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள்.





ரிஸபராசி அன்பர்களே! பக்குவமான அணுகு முறையினால் எல்லா காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள். செயல்திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் பணிசுமை குறைந்து காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதுரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும்.




கடகராசி அன்பர்களே! பணிச் சுமை அதிகரிக்கும். எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பணவரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்சனைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக வேலைகளை செய்வது நல்லது.




சிம்மராசி அன்பர்களே! சுணக்க நிலையில் இருந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். மன சஞ்சலம் நீங்கும். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டு நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! சொந்த பந்தங்களுக்குள் இணக்கம் ஏற்படும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புதுதெம்பும் உற்சாகமும் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். குடும்பத்தில் அமைதி எற்படும்.





துலாம் ராசி அன்பர்களே! திடமான நம்பிக்கையுடன் எதையும் செய்வீர்கள். எதிலும் சாதகமான நிலை காணப்படும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறிவீர்கள். எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்னைகள் குறையும்.







தனுசுராசி அன்பர்களே! கடின உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காணப்படும். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம்.




மகரராசி அன்பர்களே! நிதான போக்கைக் கடைபிடித்து வெற்றி பெறுவீர்கள். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல் படுவது நல்லது. சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த இழுபறி அகலும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம்.




கும்பராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி சார்ந்த உறவினர்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டு பெறுவார்கள். குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும்.




மீனராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பாரத இடமாற்றம் ஏற்படலாம். உறவினர்களுடன் பேசும் போது கவனமாக பேசுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஒஸ்கார் விருதினை வென்ற நீலகிரி மாவட்ட முதுமலை யானைகளை பராமரிக்கும் தம்பதிகள் பற்றிய ஆவணப்படம் தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்!



தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் முதுமலையில் யானைகளை பராமரிக்கும் தம்பதியின் கதையைக் கொண்ட தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ் என்ற குறு ஆவணப்படம் ஒஸ்கார் விருதை வென்றுள்ளது.

முதுமலை காப்பகத்தில் யானை பராமரிப்பாளர்களாகப் பணியாற்றும் காட்டு நாயக்கர் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பொம்மன், பெள்ளி தம்பதியைப் பற்றியது இந்த குறு ஆவணப்படம். ஒஸ்கார் விருது கிடைத்துள்ளது கொடுக்கும் மகிழ்ச்சியைச் சொல்ல வார்த்தை கள் இல்லை. இவை அனைத்திற்கும் இயக்குநருக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். ஆனால், இந்த நேரத்தில் யானை ரகு கூட இல்லையே என்று தான் வருத்தமாக இருக்கிறது என்று பொம்மன் நெகிழ்ந்து கூறியுள்ளார்.

தாயைப் பிரிந்த குட்டி யானைகளை இந்தத் தம்பதி பராமரித்து வருகின்றனர். யானைகளுக்கும் இவர்களுக்கும் இடையிலான உணர்வுபூர்வமான கதையைக் கொண்டது தி எலிபெண்ட் விஸ்பரரஸ் ஆவணப்படம். நெட்பிளிக்ஸில் வெளியிடப்பட்ட இந்த ஆவணப் படத்தை கார்த்தி கொன்சால்வ்ஸ் இயக்கியிருக்கிறார். குனீத்மோங்கா தயாரித்திருக்கிறார்.

தமிழகத்தின் முதுமலை பகுதியில் யானை பராமரிப்பில் ஈடுபட்டு வரும் பழங்குடி மக்களான பொம்மன், பெள்ளியின் கதை இன்று உலகம் முழுக்க பேசுபொருள் ஆகியுளது. எலிபெண்ட் விஸ்பரரர்ஸ்ஹ என்னும் ஆவணப்படம் மூலம் வெளியுலகிற்கு தெரியவந்த இவர்களின் கதை, இன்று உலகின் அத்தனை ஓரங்களிலும் பொம்மன், பெள்ளி என்ற பெயர்களை முனுமுனுக்க வைத்திருக்கிறது. காட்டு நாயக்கர் பழங்குடிகளான பொம்மன், பெள்ளியின் வாழ்வியலையும் அவர்களுக்கு யானை களுடன் இருக்கும் உறவையும் இந்த ஆவணப்படத்தில் மிகவும் உணர்வுபூர்வமாக பதிவு செய்திருந்தார் இயக்குநர் கார்த்தி கொன்சால்வ்ஸ்.

தாயை பிரிந்து, உடம்பில் பல காயங்களுடன், வால் வெட்டுபட்டு இறக்கும் தருவாயில் ஒரு குட்டி யானை காட்டிற்குள் கண்டெடுக்கப்படுகிறது. காப்பகத்தில் இருந்த பலரும் இனி அதை காப்பாற்றி வளர்த்தெடுப்பது கடினமான காரியம் என ஒதுங்கி கொள்ள பொம்மன் மட்டுமே அதனை என்னால் காப்பாற்ற முடியும் என்று கூறி தன்னுடன் அழைத்து வருகிறார்.

யானையை வளர்ப்பதற்கு அவருக்கு துணையாக பெள்ளியும் வருகிறார். அந்த யானைகுட்டிக்கு ரகு என பெயர் சூட்டி தனது குழந்தையை போலவே பராமரித்து வந்த அவர் தான் சொன்னது போலவே அந்த குட்டியை இயல்பான உடல்நிலைக்கு தேற்றி விட்டார். அதன்பின் அவருக்கு துணையாக வந்த பெள்ளிக்கு அம்மு என்ற பெண் குட்டி யானையை பராமரிக்க கொடுக்கிறார்கள்.

ஒரே கிராமத்தைச் சேர்ந்த பொம்மனும், பெள்ளியும் 50 வயதை கடந்தவர்கள். யானை பராமரிப்பில் ஒன்றாக ஈடுபட்டு வந்த பொம்மனும், பெள்ளியும் ஒரு கட்டத்தில் திருமணம் செய்து கொள்கிறார்கள். பொம்மன் பெள்ளி ரகு, அம்மு என நால் வரும் ஒரு குடும்பமாக மாறுகிறார்கள்.

இந்த தம்பதியினர் யானைகளின் மீது கொண்டிருக்கும் இத்தகைய நிபந்தனையற்ற அன்பு தான் எலிபெண்ட் விஸ்பரர்ஸ் ஆவணப்படத்தின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. இப்போது இந்த ஆவணப்படம் ஒஸ்கார் விருதை வென்றுள்ள அதே சமயம் இத்தனை பெரிய வரவேற்பு தங்களின் கதைக்கு கிடைக்குமென பொம்மன், பெள்ளி சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை. எப்போதும் போல் எந்தவொரு பரபரப் பும் இல்லாமல் முதுமலையில் தங்களது அன்றாட வேலையை பார்த்து வருகின்றனர்.

# இலங்கை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகே

## யாழ்.பல்கலை மாணவர்கள் சந்திப்பும் கோரிக்கையும்

(7ம் பக்கத் தொடர்ச்சி) வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு சர்வதேச நீதி பொறி முறையினூடாக நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

7. தமிழர் தாயகத்தில் நிலை கொண்டுள்ள சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழரின் நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9. இலங்கை அரசியல் அமைப்பின் 6ம் திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசையை வெளிப்படுத்தும் அரசியல் வெளி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு, நீண்டகாலம் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுவிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்படி விடயங்கள் தீர்க்கமான வெளிப்படுத்தலை வெளியிடும் இடத்தேதான் இனப்பிரச்சனைக்கு நிரந்திர தீர்வையும் அதன்வழி பொருளாதார பிரச்சனைக்கு ஓர் தீர்வையும் எட்ட முடியும் எனவும் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

# Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய
கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.